பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை 29.10.2019 | கதிர் 358

### இது ரகசியம் அல்ல!

ஒரு தேர்தலில் வெல்வதற்கு முக்கியமானவற்றுள் ஒன்று – வாக்குறுதிகள்.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவோமா, இல்லையா என்பவை எல்லாம் வேறு விடயம். ஆனால் கொடுக்கும் வாக்குறுதிகள் மக்கள் மனதைத் தட்டித் பக்கம் 02 »

# வேட்பாளர்கள் தமிழர் தரப்புக் கோரிக்கைகளை ஏற்காவிட்டால் திட்டவட்டமான தீர்மானம் நாளை!



## 5 தமிழ்க் கட்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் கூடி முடிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 29

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பின் கோரிக்கைகளை தென்னிலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏற்காத பட்சத்தில் தமிழ் மக்கள் திட்டவட்டமான முடிவை எடுக்கவேண்டிய சூழ்நிலை உருவாகும். அதற்கான இறுதிமுடிவை நாளை புதன்கிழமை எடுக்கவுள்ளோம் என ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். பக்கம் 03 »

# தீர்வை நிச்சயம் வழங்குவேன் என்னை நம்பி வாக்களியுங்கள்

## யாழ்ப்பாணத்தில் வைத்து பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய நேற்று உறுதிமொழி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 29

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று நாம் ஆட்சிக்கு வந்ததும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் முதல் அடிப்படைப் பிரச்சினைகள் என அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன் என்றுஉறுதிமொழி வழங்குகிறேன். ஆனால் உங்கள் தலைவர்கள் உங்களை வைத்து தங்கள் அரசியலைச் செய்கின்றார்கள். ஆகவே அதிலிருந்து நீங்கள் வெளிவர வேண்டும். நாங்கள் உங்களுக்கு சௌபாக்கியமான எதிர்காலத்தைப் பெற்றுத் தருவோம் என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கிறோம். என்னை நம்பி வாக்களியுங்கள்.

– இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதியளித்தார் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ. பக்கம் 03 »

## அரசியல் கைதிகள் அனைவரையும் புனர்வாழ்வின் பின் விடுவிப்பேன்!

### யாழ்ப்பாணத்தில் கூறினார் கோட்டாபய

யாழ்ப்பாணம், ஒக். 29

நான் ஜனாதிபதியானதும் சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை விடுவிப்பேன் எனப் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட் பக்கம் 02 »

## “வெள்ளைவான் முதலாளி கோட்டாவே வெளியேறு”

### காணாமற்போனோரின் உறவுகள் நேற்று நல்லூர் ஆலய முன்றிலில் ஆர்ப்பாட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 29

பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமானகோட்டாபயராஜபக்ஷவின்யாழ். விஜயத்துக்கு எதிர்ப்பு தெரி பக்கம் 02 »

## உங்களை வீதியில் விட்ட ஐ.தே.கவுக்கு முட்டுக் கொடுக்கின்றது கூட்டமைப்பு!

### மஹிந்த நேற்று யாழ்ப்பாணத்தில் காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 29

வடக்கு மக்களின் ஜனநயாகத்தை பறித்தெடுத்து பழிவாங்கி வீதிக்கு விட்டவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர்தான். யாழ். நூல் நிலைய எரிப்பு உட்பட பல விடயங்களுக்கு அவர்களே பொறுப்புக் கூற வேண்டும். ஆனால் இதனை எல்லாம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு பக்கம் 03 »



## கிளிநொச்சியில் ஒருவர் அடித்துப் படுகொலை!

கிளிநொச்சி, ஒக். 29

கிளிநொச்சி – இயக்கச்சி பகுதியில் நேற்று முன்தினம் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். பக்கம் 02 »

## தாம் ஆட்சிக்கு வந்தால் நீதித்துறையை நேரடியாகக் கையாள்வாரா மஹிந்தர்?

யாழ்ப்பாணம், ஒக். 29

கொலைக் குற்றச்சாட்டில் சிறை வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானை ஆட்சிக்கு வந்ததும் விடுவிப்போம் என மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார். இந்தக் கருத்து மூலம் தாம் ஆட்சிக்கு வந்ததும் நீதித் துறையை நேரடியாகக் கையாள்வோம் என்பதை அவர் வெளிக்காட்டுகிறார் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத் பக்கம் 03 »

## வடக்குக் கிழக்கில் ஒரு லட்சம் வேலைவாய்ப்பு: உடனடியாகவே 30 ஆயிரம் பேருக்கு நியமனம்

### கோட்டா யாழில் உறுதி தெரிவிப்பு என்கிறது ஈ.பி.டி.பி.



யாழ்ப்பாணம்,ஒக்.29

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபய ராஜபக்ஷ, ஈழ மக்கள் பக்கம் 02 »

## "வெள்ளைவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்து காணாமற்போனவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்காக கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலரும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

இந்நிலையில் யாழ்.சங்கிலியன் பூங்கா முன்பாக ஒன்று திரண்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், கோட்டாபயவுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது கோட்டாபாயவே வெளியேறு, காணாமலாக்கப்பட்ட உறவுகள் எங்கே? வெள்ளைவான் முதலாளி கோட்டாவே வெளியேறு, எமது மக்களைக் கடத்தாதே, ஐ நா அமைதிப்படையே வா, சர்வதேச நீதிமன்றில் நிறுத்து, இனப்படுகொலையாளி மஹிந்த, கோட்டாவை கைது செய், பக்கச்சார்பற்ற விசாரணையை நடாத்து உள்ளிட்ட பல்வேறு கோசங்களை அவர்கள் எழுப்பியிருந்தனர்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள இளங்கதிர் விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவ்வாறு இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அனைவரும் சந்தோசமாக வாழும் நாட்டைக் கட்டிஎழுப்புவேன். அதனால் என்னை நம்பி நீங்கள் வாக்களியுங்கள். நான் ஜனாதிபதியானதும் நான் சொல்வதனை 100 வீதம் நிறைவேற்றுவேன்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் பல இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. பல இராணுவத்தினர் குவிக்கப்பட்டு இருந்தனர். அவற்றை நாம் சிறிது சிறிதாக அகற்றினோம். முப்படைகளின் வசம் இருந்த தனியார் காணிகளை காணி உரிமையாளர்களிடம் மீள கையளித்தோம் அவ்வாறு 90 வீதமான தனியார் காணிகளை மீள அவர்களிடம் கையளித்தோம்.

இன்றும் எமது தேர்தல் அறிக்கையில் தமிழ் மக்களுக்கு எதுவும் இல்லை என்று பொய் கூறுகிறார்கள். நாம் நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் குறிப்பிட்டுள்ளோம், விவசாயிகளுக்கு உரம் , மானியம், வழங்குவது தொடர்பில் குறிப்பிட்டுள்ளோம்.

கல்வி தொடர்பில் குறிப்பிட்டுள்ளோம். சாதாரண தரம் சித்தியடையாத மாணவர்களுக்கு தொழிற்கல்வி வழங்குவது தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம். பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி இளையோருக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுப்பதன் ஊடாக நாட்டினை கட்டியெழுப்ப முடியும்.

போரின்போது சரணடைந்த 13 ஆயிரம் விடுதலைப் புலிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தி அவர்களை சமூகத்துடன் இணைத்தோம். சிறைகளில் வாடிய 5000கும் மேற்பட்ட அரசியல் கைதிகளில் 274 பேரை தவிர ஏனையோரை கட்டம் கட்டமாக விடுவித்தோம். நான் ஜனாதிபதியானதும் தற்போது சிறையில் வாடும் 274 அரசியல் கைதிகளையும் விடுவிப்பேன் – என்றார். (ஐ-07)

# யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு இல்லையெனில் கோட்டா எப்படி அங்கு பிரசாரம் செய்கின்றார்?

## மங்கள சமரவீர கேள்வி

கொழும்பு, ஒக். 29

வடக்கிற்கு செல்வது பாதுகாப்பு இல்லை எனக் கூறிய கோட்டாபய ராஜபக்ஷ தற்போது மட்டும் எவ்வாறு சென்றார் என அமைச்சர் மங்கள சமரவீர கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழில் நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார கூட்டம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வந்த நிலையில் தனது டுவிட்டரில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் அந்த பதிவில் இரண்டு மாதங்களுக்கு முன்பு வடக்குக்கு பயணம் செய்வது குறித்த பாதுகாப்பு காரணங்களைச் சுட்டிக்காட்டி கோட்டாபய யாழ்ப்பாணம் நீதிமன்ற வழக்கை புறக்கணித்திருந்தார்.

இப்போது அவர் யாழ்ப்பாணத்தில் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்கிறார். ஆனால் நீதிமன்றங்கள், ஊடகங்களின் கேள்விகள் மற்றும் விவாதங்களுக்கு ஏன் இவ்வளவு பயப்படுகின்றார் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வாக்களிப்பு நேரத்தை நீடிக்கும் திட்டமில்லை!

கொழும்பு, ஒக். 29

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நேரத்தை நீடிக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கவில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேர்தல் சட்ட விதிகளின் பிரகாரம் காலை 07 மணி முதல் மாலை 04 மணி வரையிலான காலமே வாக்களிப்புக்கான நேரமாகும். சில ஊடகங்களில் வாக்களிப்பு நேரத்தை ஒரு மணி நேரம் நீடிக்கத் திட்டமிட்டிருப்பதாக வெளி வந்திருந்த செய்திகளில் எவ்வித உண்மைகளுமில்லை. இவ்வாறான எந்தவித ஆலோசனைகளோ அல்லது தீர்மானங்களோ எம்மால் எட்டப்படவில்லை. எனவே, மக்கள் இறுதி நேரம் வரை காத்திராமல், நேர காலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று, தத்தமது வாக்குகளைப் பதியுமாறும் அவர் வேண்டியுள்ளார்.

நாட்டின் தேர்தல் வரலாற்றில் வாக்குச்சீட்டு மிக நீளமானதாகவும், ஆகக் கூடிய வாக்காளர்களையும் கொண்ட தேர்தலாகவும் இந்த ஜனாதிபதித் தேர்தல் அமைந்திருக்கும் நிலையில், வாக்காளர் ஒருவர் தாம் தெரிவு செய்யும் வேட்பாளரின் சின்னத்தைத் தேடிப்பிடிப்பதில் நேரமெடுக்கலாம் எனக் கருதப்படுவதால், கூடுதலாக வாக்காளர்களைக் கொண்ட வாக்களிப்பு நிலையங்களை இரண்டாக அதிகரிப்பதற்கு மாத்திரமே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாக்குப்பெட்டிகளும் கூடுதலாகப் பயன்படுத்த வேண்டிய நிலையும் உருவாகி உள்ளது. இதனால், உரிய நேரத்தில் வாக்களிப்பை நடத்தி முடிக்கக்கூடிய விதத்தில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலைமையை உணர்ந்து வாக்காளர்கள் காலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பது சிரமங்களைத் தவிர்க்க உதவ முடியும். இது தவிர, தற்போது நாட்டில் சீரற்ற காலநிலை காணப்படுவதால், பிற்பகல் வேளையில் மழை பெய்யக் கூடுமாகையால், முற்பகலிலேயே வாக்களிப்பது சிறப்பானதாக அமையும் – என்றார். (ஐ)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த நபர் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் இயக்கச்சியை சேர்ந்த தர்மலிங்கம் தங்கராசா (வயது–57) என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலையில் ஏற்பட்ட மோதல் மாலையில் கொலையில் முடிந்துள்ளது. அடித்துக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படும் நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஏனைய நபர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகக் கட்சி சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பலவற்றுக்கு டக்ளஸ் தேவானந்தாவிடம் இணக்கம் தெரிவித்துள்ளார் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சியால் முன்வைக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் வாழும் ஒரு லட்சம் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக் கோரிக்கைக்கு அவர் இணக்கம் தெரிவித்தமையுடன் அதன் முதற்கட்டமாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும் உடனடியாக 30 ஆயிரம் பேருக்கு நியமனங்கள் வழங்குவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஏனையோருக்கும் விரைவாகத் தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் அவர் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறப்பவையாக இருக்க வேண்டும். அதுதான் அரசியல் சாணக்கியம்.

எழுபதுகளில் மக்களின் அத்தியாவசியப் பாவனைப் பொருளான அரிசிதான் தேர்தலில் பிரதான பேசுபொருள். சந்திர மண்டலத்திலிருந்தாவது அரிசி கொண்டு வந்து தாராளமாக – இலவசமாக – தருவோம் என்றும் கூட வாக்குறுதி அளிக்கப்பட்டது.

ஏன், கடந்த நான்கு, ஐந்து ஜனாதிபதித் தேர்தல்களில் வென்ற அனைத்து வேட்பாளர்களுமே தாங்கள் பதவிக்கு – ஆட்சிக்கு – வந்தால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்ற வாக்குறுதியோடுதான் தேர்தல் களத்துக்கு வந்தார்கள். வென்றதும் அந்த வாக்குறுதிகள் காற்றில் பறந்தன. அடுத்தடுத்த தடவைகளும் தாங்கள் அந்தப் பதவியில் தொடர்வது தான் அவர்கள் இலக்காக இருந்தது.

வெல்லக் கூடிய வாய்ப்புள்ள வேட்பாளர்களுக்குத்தான் வாக்குறுதி கொடுப்பதில் சிக்கல் உண்டு. வென்று வந்த பின்னர் அதனை நிறைவேற்றும்படி அழுத்தம் வரும்.

வெல்ல முடியாத வேட்பாளர்கள் தங்கள் இஷ்டப்படி வாக்குறுதிகளை அள்ளி வீசலாம். பயப்படத்தேவையில்லை.

இப்போது ஜே.வி.பி. வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கா அள்ளி வீசும் வாக்குறுதிகள் இந்த வகையறாக்கள்தாம்.

தமிழர் தரப்பில் கூட சிலர், மிகக்கடும் நிலைப்பாடு எடுத்து தேசம், தேசியம், சுயநிர்ணயம் என்றெல்லாம் முழங்குகின்றார்கள். தேர்தலில் வெல்லாதவரை வெளியில் இருந்தபடி அப்படி எல்லாம் முழங்கலாம். முழங்கியதோடு விடயம் முடிந்துவிடும். ஆகையினால் எப்படியும் முழங்கலாம், வாக்குறுதிகள் கொடுக்கலாம். ஆனால் தேர்தலில் வென்றால் சிக்கல்தான்.

உள்ளூராட்சி சபையில் கூட தேர்தலில் வென்ற பிறகு பதவிகள், பொறுப்புகளை எடுக்காமல் ஜாகா வாங்க வேண்டிய நிலைமை இப்படித்தான் வந்தது.

சரி. அதை விட்டு விட்டு இப்போது ஜனாதிபதி தேர்தல் விடயத்துக்கு வருவோம்.

தமிழர்களுக்கு – வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு – தாம் என்ன செய்யப் போகின்றார். அவர்களுக்குத் தாம் அளிக்கும் வாக்குறுதிகள் யாது என்பது குறித்து சஜித் பிரேமதாஸா இன்னும் வாய் திறக்கவில்லை. அவரின் தேர்தல் விஞ்ஞாபனம் நாளை வருகின்றது. அதில் ஏதும் இருக்கின்றதோ தெரியவில்லை. அல்லது தமது பிரசாரக் கூட்டத்துக்கு யாழ். வரும்போது அது குறித்துப் பேசுவாரோ தெரியாது.

ஆனால், நேற்று யாழ்ப்பாணம் வந்த மஹிந்தரும், கோட்டாபயவும் கொடுத்த வாக்குறுதிகள் சில சலசலப்பை – வரவேற்பை – பெற்றுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் புனர்வாழ்வளித்து விடுவித்தல், ஏதோ ஒரு தீர்வு தருவோம் என்ற கோட்டாபயவின் அறிவிப்பு, பல்லாயிரக் கணக்கான தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவோம் என்ற மஹிந்தவின் உறுதிமொழி போன்றவை எல்லாம் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன என்பது மறுக்கக் கூடியதல்ல.

இந்த வரிசையில் தெற்கில் சஜித் பிரேமதாஸா பக்கத்தில் இருந்து வந்திருக்கும் ஓர் உறுதிமொழி அரைப்பங்கு வாக்காளர்களை முழுமையாகக் கவர்ந்திருக்கின்றது.

*"இது பற்றிப் பேச நான் வெட்கப்படவில்லை, கூச்சப்படவில்லை"* – என்ற முன்னறிவித்தலோடு அந்த விவகாரம் குறித்து பிரஸ்தாபித்திருக்கின்றார் அவர்.

*"பருவ வயது மகளிரில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் அந்த வயதுக் கால உடலியல் மாற்றச் சிக்கல்களால் தங்கள் கல்வியைத் தவற விட வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்று யுனிசெவ் கூறுவதை அவர் சுட்டிக்காட்டினார். அதனால் மாற்று நிதி வசதி ஏற்பாடுகள் செய்யப்படும் வரை பருவ வயது மகளிரின் தேவையை நிறைவு செய்யும் வகையில் 'சுகாதாரத் துணி' (Sanitary Hygiene Products) இலவசமாக வழங்கப்படும் என உறுதி கூறுகிறேன்."* – என்று சஜித் பிரேமதாஸ அறிவித்தார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

*"இதற்காக என்னை 'Pad Man' என முத்திரை குத்துவார்கள். அதனை நான் பெருமையுடன் ஏற்றுக் கொள்வேன். 'Man With Van' என்ற பெயரிலும் விட இது மேலானதுதானே...!"* – என்றும் பிரேமதாஸ கூறியிருக்கின்றார்.

மகளிர் மனம் கவர, அவர்களின் அடிவயிற்றுப் பிரச்சினையைத் தொட்டிருக்கின்றார் சஜித்..!

விவகாரமான ஆள்தான் பாருங்கோ..!

★ ★ ★

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்குபற்றிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ் தெரியாமல் போனது நல்லதாகப் போய்விட்டது. இல்லையேல் தங்கள் தரப்பில் மேடையில் இருந்த தமது ஆதரவாளர்களின் பிய்ச்சல் பிடுங்கல் புரிந்து, தமது சிண்டைப் பிய்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருந்திருக்காது.

நேற்றைய கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர் வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே. மேடையில் யாழ். மாவட்ட எம்.பியும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் அமர்ந்திருந்தார்.

கரவெட்டி பிரதேச சபை உறுப்பினரும், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் தந்தையுமான இராமநாதனை பேச அழைத்தார்கள். அவர் பேசத் தொடங்கினார்.

*"வடமாகாண ஆளுநர் ஒருவர் திறமையற்றவராக இருக்கின்றார். அவர் என்ன செய்கிறார்? லண்டனிற்கும் கனடாவிற்கும் சென்று டான்ஸ் போட்டுக் கொண்டிருக்கின்றார்.*

*"அவருக்கு முன்னர் இருந்தவர்களும் திறமையற்றவர்கள் தான்.*

*"வடமாகாணத்தில் முன்னர் ஒரு அமைச்சர் இருந்தார். பேப்பர்களை 'பாஸ்' பண்ணினார். அவை குப்பைக்குப் போனது. அதை அகற்றக் காசு வேண்டும். 16ஆம் திகதி நாங்கள் வெற்றியடைவோம். 17ஆம் திகதி பதவி ஏற்போம். அன்று தொடக்கம் அங்கஜனின் உயர்மட்டக்குழு பாதுகாப்பாக இருக்கும்"* – என்றார் அவர்.

முன்னாள் ஆளுநர் ரெஜினோட் குரேயையும், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் மேடையில் வைத்துக் கொண்டு இராமநாதன் போட்ட 'ஸேம் சைட் கோல்', தமிழ் விளங்காமையால் மஹிந்தருக்கும், கோட்டாபயவுக்கும் புரியாமல் போயிற்று. இல்லையேல் இந்த மாதிரியான குசும்புத்தனம் குறித்து மஹிந்தர் – கோட்டா இணை பொறுத்துப் போயிருக்காது...!

- மின்னல் -

காலைக்கதிர்
Kalaikathir



## தீர்வை நிச்சயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பொஸ்கோ ஆரம்பப் பாடசாலைக்கு முன்னாலுள்ள விளையாட்டுமைதானத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உங்களது அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பேன் என்று நான் தெரிவித்திருக்கிறேன். நான் ஆட்சிக்கு வந்ததும் இப்பகுதி வாழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் நிச்சயம் தீர்த்து வைப்பேன் என்ற உறுதிமொழியை இங்கு வழங்குகின்றேன்.

உங்களின் சில தலைவர்கள் உங்களை இன்னும் கடந்தகாலத்திற்குள்ளேயே வைத்திருக்கிறார்கள். அந்தக் கடந்த காலத்தை வைத்தே அவர்கள் அரசியல் செய்கிறார்கள். ஆனால் நான் உங்களது எதிர்காலம் பற்றியே சிந்திக்கின்றேன். ஆகவே உங்களுக்கு சௌபாக்கியமான எதிர்காலத்தை நான் பெற்றுத் தருவேன் என உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

வட பகுதியில் காண்கின்ற அபிவிருத்திகள் எல்லாமே மஹிந்த காலத்தில்தான் ஆரம்பமானவை. அவரது காலத்தில் தான் இந்த அபிவிருத்திகள் நிறைவேற்றப்பட்டும் இருக்கின்றன. குறிப்பாக வீதிக் கட்டமைப்பு, ரயில் நிலையங்கள் உள்ளிட்ட பொருளாதார அபிவிருத்திகள் என அனைத்தும் அவர் காலத்தில் தான் நடந்தன.

அந்தக் காலப் பகுதியிலே குறிப்பாக கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப் பகுதிகளில் பல இரானுவ முகாம்களும் இராணுவச்சிப்பாய்களுமே கூடுதலாக இருந்தார்கள். ஆனால் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவம் வசம் இருந்த காணிகளில் 90 வீதத்தை விடுவித்தவன் நான்தான். பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பல இடங்களின் காணிகளை விடுவித்திருந்தோம்.

அதேபோல நாம் ஆட்சிக்கு வருகின்ற போது எஞ்சியுள்ள காணிகளையும் இனியும் விடுவிப்போம். அது தொடர்பில் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்தியிருந்தேன். அந்தக் காணிகள் விடுவிக்கப்படும் வரை அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் அந்தக்காணிகளில் பயிர்ச்செய்கை செய்வதற்கு நான் நடவடிக்கை எடுத்திருந்தேன். இருப்பினும் 2015 ஆம் ஆண்டு நாம் ஆட்சியில் இருந்து விலக்கப்பட்டதால் எஞ்சிய பகுதி வேலைகளை எம்மால் செய்ய முடியவில்லை.

நான்தேர்தல்விஞ்ஞாபனத்தில் அபிவிருத்தியைப் பற்றியே பேசியிருக்கின்றேன். இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களை முன்னிலைப்படுத்தி மக்களின் விஞ்ஞாபனமாகவே இதனை வெளியிட்டிருக்கிறேன். குறிப்பாக விவசாயிகள், மீனவர்கள் உட்பட கல்வி, வேலைவாய்ப்பு என பல துறை சார்பிலும் பல தரப்பினருக்கும் பல்வேறு திட்டங்களையும் யோசனைகளையும் முன்வைத்துள்ளேன்.

குறிப்பாக விவசாயிகளது கடனைத் தள்ளுபடி செய்வதுடன் உதவிகளை வழங்குவதாகக் கூறியுள்ளேன். அதேபோல இளைஞர், யுவதிகளுக்காக கூடுதல் முக்கியத்துவம் வழங்கியிருக்கிறேன். இளைஞர்கள் தரமான கல்வியைப் பெற்றுக் கொள்ளாததால் வேலையில்லாப் பிரச்சினை காரணமாக நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதனால் இளைஞர்களுக்கு தரம்மிக்க கல்வியை வழங்குவதற்காக பாரிய நிதியை முதலீடு செய்வேன் என்பதை உறுதிபடக் கூறிக் கொள்கிறேன்.

குறிப்பாக உயர் தரம் சித்தியடைந்து பல்கலைக்கழகம் போக முடியாத மாணவர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழகம் போவதற்கான வசதியை நிச்சயமாக ஏற்படுத்திக் கொடுப்பேன். அதேபோல கா.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்து உயர் தரம் சித்தியடையாத அந்த மாணவர்களுக்கும் அவர்களது வாழ்க்கையை மேம்படுத்துவம் திறனை விருத்தி செய்வதற்கான பயிற்சியை வழங்குவதற்கு யோசனைகளை முன்வைத்திருக்கிறேன்.

குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்களாகத் தரமான கல்வியை வழங்குவோம். அந்தத் தரமான கல்வியை மறுசீரமைத்துநிச்சயமாகவேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய வகையில் கல்வியை மறுசீரமைப்புச்செய்வோம் என்பதையும் உறுதிபடக் கூறிக் கொள்கிறேன். தொழில் நுட்ப அறிவையும் பெற்றுக்கொடுக்க ஆவன செய்வோம். அதேபோல பொருளாதாரரீதியானமுன்னேற்றத்திற்கு நாம் பல்வேறு திட்டங்கள், யோசனைகளை முன்வைத்தள்ளோம். நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாம் சொன்ன அனைத்தையும் நிச்சயம் செய்வோம். எம்மிடம் பல திட்டங்கள் யோசனைகள் உள்ளன. அவற்றை மக்களுக்காக நாம் பயன்படுத்தத் தயாராகவே இருக்கிறோம் – என்றார். (ஐ-07)

## வேட்பாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு தொடர்பில் முடிவெடுப்பதற்காக 5 தமிழ் அரசியல் கட்சிகளின் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பிரைட் இன் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடல் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி மூன்றரை மணி நேரம் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித்தேர்தல்தொடர்பில் பல்வேறுபட்ட விடயங்கள் பற்றி ஆராய்ந்தோம். தென்னிலங்கையில்போட்டியிடும்பிரதானதேசியக் கட்சிகள் தமிழ்த் தேசியக் கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் எடுத்துள்ள நிலைப்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

ஒரு நாட்டுக்குள் தமிழர் இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய விதமாக மட்டுமல்லாது தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கே கோரிக்கைகளை முன்வைத்தோம்.

ஆனால்தென்னிலங்கையில் உள்ள பிரதான தேசியக் கட்சிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்கள் எமது கோரிக்கைகளை இனவாதக் கோரிக்கைகளாகப் பூதாகரமாகக் காட்டுகின்றனர். இந்தக் கட்சியினர் எமது கோரிக்கைகளை ஏற்காத பட்சத்தில் தமிழ் மக்கள் திட்டவட்டமான முடிவுகள் எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவர்.

எமதுஐந்துதேசியக்கட்சிகளின் இறுதிமுடிவுநாளைகூடிஆராய்ந்து எடுக்கப்படும். எமது இறுதி முடிவுகளுக்கு வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் இணங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

இதேவேளை இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பாக அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பாக அதன் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், நாடாளுமன்றஉறுப்பினர்சிவசக்திஆனந்தன், புளொட் சார்பாக அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ப. கஜதீபன், ரெலோ சார்பாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.குகதாஸ், மூத்த உறுப்பினர் கென்றி மகேந்திரன், தமிழ் மக்கள் கூட்டணி சார்பாக அதன் ஊடகப் பேச்சாளர் த.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## தாம் ஆட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு தேர்தல் பிரசராத்துக்காகச் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, சிறையில் உள்ள பிள்ளையானை சந்தித்ததுடன் தாம் ஆட்சிக்கு வந்ததும் அவரை விடுவிப்போம் எனக் கூறியிருந்தார். இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

படுகொலை குற்றச்சாட்டில் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவ்வாறு நீதிமன்றின் ஊடாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையானை மஹிந்த தாம் ஆடசிக்கு வந்தவுடன் உடனடியாக விடுதலை செய்வேன் எனக் கூறியுள்ளார்.

அப்படியாயின் இதன் ஊடாக இந்த நாட்டு மக்களுக்கு என்ன கூற முனைகின்றார்? நீதிமன்றின் ஊடாகப் பிள்ளையான் விசாரணைகளின் ஊடாக விடுதலை செய்யப்படுவார் என்கிறாரா?அல்லது தங்கள் ஆட்சி வந்ததும் நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக அவரை விடுதலை செய்வோம் என்கின்றாரா?அவ்வாறு நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாகச் சிறையில் உள்ள பிள்ளையானை விடுதலை செய்வோம் என்பாராயின் மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கள் ஆட்சிக்கு வந்ததும் நீதித்துறையை நேரடியாகத் தாம் கையாள்வோம் என்பதை வெளிக்காட்டுகின்றனர்.

இதுமட்டுமல்ல ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவும் தாம் ஆடசிக்கு வந்தால் சிறைகளில் உள்ள இராணுவத்தினரை விடுவிப்போம் என்று கூறுகின்றார். சிறையில் உள்ள இராணுவத்தினர் நீதிமன்றின் ஊடாகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவர்கள் ஆட்சிக்கு வர முன்னரே இவ்வாறான கருத்துக்களைக் கூறுவது நீதித்துறையைக் கேள்விக்கு உள்ளாக்கும். சிறையில்உள்ளபிள்ளையானாக இருந்தாலும் சரி இராணுவத்தினராக இருந்தாலும் சரி அவர்கள் நீதித்துறை ஊடாக விடுதலை செய்யப்படவேண்டும். அதனை விடுத்துநிறைவேற்றுஅதிகாரத்தை இதற்குப் பாவிக்க நினைப்பது ஜனநாயக ஆட்சியாக அமையாது – என்றார். (ஐ-07)

## உங்களை வீதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் உங்கள் பிரதிநிதிகளாக இருக்கும் கூட்டமைப்பினர் முட்டுக் கொடுத்து தொடர்ந்தும் ஆதரவை வழங்கி வருகின்றனர். அதனால் உங்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. ஆகவே நீங்கள் எங்களை நம்பலாம். நாங்கள் உங்களை நம்புகின்றோம். அதனூடாக நாம் முன்னோக்கி பயணிப்போம்.

– இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார் பொதுஜன பெரமுனவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவை ஆதரித்து நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்துக்கு வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. யாழ்ப்பாணத்துக்கு அதிக தடவைகள் வந்த தலைவராக நானே இருக்கிறேன் என்பதையும் சந்தோசமாகத் தெரிவிக்கிறேன். வேறு எந்தத் தலைவரும் இங்கு அதிக தடவைகள் வரவில்லை. முழுநாட்டுமக்களும்யாழ்ப்பாணத்திலிருந்துகொழும்புக்கும்கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் சென்று வர ஆவன செய்தவன் நான். யாழ்ப்பாணமும் யாழ் மாவட்ட மக்களும் எனக்கு புதியது அல்ல.

கடந்த 1970 ஆம் ஆண்டு இளம் நாடாளுமன்ற உறுப்பினர் என்றவகையில் இந்தமண்ணுக்கு வந்து இங்குள்ள மக்களுடன் பேசியிருக்கிறேன். சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் துரையப்பா காலத்தில் இங்கு வந்திருந்தோம். அந்தக் காலம் வடக்கு விவசாயிகளுக்கு நல்ல காலமாக இருந்தது. அதனால் விவசாயிகள் சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஏற்றுக் கொண்டார்கள். அதேபோல் மீனவர்களுக்கும் சுதந்திரம் இருந்தது. இதனால் இரண்டுதுறைகளும் முன்னேற்றமடைந்தன. மக்களும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

ஆனால் கடந்த 1978 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் இந்தச் சலுகைகள் அனைத்தையும் வடக்கு வாழ் மக்களுக்கு நீக்கிவிட்டனர். அதுவும் தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் வந்த அந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் தமிழ் மக்களைமிகவும்பழிவாங்கினார்கள். குறிப்பாக வடக்கு வாழ் மக்களின் ஜனநாயகத்தைப்பறித்தெடுத்தார்கள், படித்த இளைஞர்கள். விவசாயிகள் என அனைவரையும் வீதியில் விட்டு விட்டார்கள். நூலகத்தை எரித்தார்கள். அபிவிருத்தியை மிகவும்கேவலமாகச்சீர்குலைத்ததே அவர்களது ஆட்சியில்தான்.

மிகவும் பெறுமதி வாய்ந்த புத்தகசாலை எரித்தமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்பெடுக்கவேண்டும். அதுக்குப் பின்னர் ஏற்பட்ட நிலைமைகளை நான் விரிவாக உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அதனால் வீதிகள், ரயில்வே என அனைத்தும் மூடப்பட்டன. வெளிநாட்டுப் படையினர் இலங்கைக்குள் வந்தார்கள். அதனால் 30 வருடங்கள் யுத்தம் இருந்தது. முழு நாடும் அகதி முகாமாக மாறியது என்று சொன்னால் பிழையில்லை. இங்கே குண்டு வெடித்தது போல காலி, மாத்தறை எனக் குண்டுகள் வெடித்தன. அதனால் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில் நாங்கள் ஏ-9 பாதையை திறந்தோம், ரயில் சேவையைக் கொண்டு வந்தோம். இதேபோன்று பாலங்களை, வீதிகளை, கட்டடங்களை அமைத் தோம். இதனூடாக வடக்குக்கு அபிவிருத்தியையும் நாம் கொண்டு வந்தோம். குறிப்பாக மினச்சார வசதியைப் பெற்றுக் கொடுத்தோம். பலருக்கும் வேலை வாய்ப்பைப்பெற்றுக்கொடுத்தோம். இதற்கும் மேலாக வட மாகாண சபையை அமைத்தோம்.

ஆனால் அந்த வடமாகாண சபையால் உங்களுக்கு ஏதும் நடந்ததா இல்லையா என்று எமக்குத் தெரியாது. ஆயினும் உங்களுக்குத் தேவையான வட மாகாண நிர்வாகத்தை நாம் ஏற்படுத்திக் கொடுத்தோம். இந்த அனைத்தையும்செய்து இங்குள்ள மக்களின் ஜனநயாகத்தை மீளப் பெற்றுக் கொடுத்தது மட்டுமல்ல, எம்மால் செய்யக் கூடிய அனைத்தையும் அபிவிருத்தியாக, சலுகைகளாக உதவியாக பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

அதே நேரத்தில் வட பகுதி வாழ்மக்களுடைய வாழ்க்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாகப் பொறுப்பெடுத்தார்கள். இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஆட்சியை தொடர்வதற்கு முட்டுக்கொடுத்து உதவி வருபவர்கள் இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் தான். ஆனால் அரசுக்கு ஆதரவை வழங்கி வருகின்ற கூட்டமைப்பு இந்த மக்களுக்கு என்ன செய்தது.

குறிப்பாக விவசாயி, மீனவர், வேலைவாய்ப்பு உள்ளிட்ட பிரச்சனைகைள் தீர்த்து வைக்க என்ன செய்தது? இதைப்பற்றிச் சிந்தித்து வேலை செய்வதை விடுத்து ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் காப்பாற்றுவது குறித்தே அன்று முதல் இன்று வரை சிந்தித்து வந்தார்கள். இதனால் இங்கே இருக்கின்ற கூட்டமைப்பு மற்றும் விக்கினேஸ்வரன் ஆகியோருக்குபிரச்சினைகள் இல்லை. இங்குள்ள இளைஞர் யுவதிகளும் ஏனையவர்களும் தான் பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாங்கள் பல வேலைகளைச் செய்தோம். ஆனால் தொடர்ந்தும் வேலை செய்ய முடியாத வகையில் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அங்கே ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி மக்களுக்கும் எதுவும் செய்யவில்லை. ஆனால் தங்கள் பைகளைநிரப்பிக்கொண்டார்கள். தங்களுக்கு தாங்களே உதவி செய்து கொண்டார்களே தவிர பொதுமக்கள் பற்றி எதுவித கரிசனையும் இல்லாமல் இருந்தார்கள். அதனைச் செய்வதற்கு கூட்டமைப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு உதவி செய்து கொண்டு இருந்தார்கள்.

அரசநிர்வாகங்களில்கூடுதலாக தென்பகுதி இளைஞர்களுக்கே வேலைவாய்ப்பு இருக்கிறது. வடக்கிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு அப்படி இல்லை. இனி இதனைநாங்கள்வெளிப்படையாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இதனை நீங்கள் அலுவலகங்களின்சென்றுபார்க்கின்ற போது தெரிந்து கொள்ள முடியும்.

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை கொடுக்கின்ற போது வடக்கு, கிழக்கு, தெற்கு என்று நாங்கள் ஏதும் பார்க்கவில்லை. ஆகஎல்லோருக்கும்வேலைவாய்ப்பை கொடுத்தோம். அதுவும் 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை கொடுத்திருந்தோம். எனவே அரச சேவைக்கு இளைஞர்களை இணைத்துக் கொள்வது முக்கியம் என நான் நம்புகிறேன் – என்றார். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தேவைப்படும் ஐக்கியம்

இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளினதும் வேட்பாளர்கள், சிறுபான்மையினரான தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் தமது அணுகுமுறை எப்படி இருக்கப் போகின்றது என்பது தொடர்பில் தெளிவான ஒரு கருத்தியலை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைச் சிக்கலில் சிறுபான்மை இனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு எதிராக அநீதி – அட்டூழியம் – இழைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் அது விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு நீதியை நிலைநாட்டும் – பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தும் – போக்குத் தெளிவாக உள்ளது.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கடந்த பத்து ஆண்டுகளாக இலங்கை தொடர்பில் – பெரும்பாலும் ஏகமனதாகவும், இலங்கையின் பங்களிப்பு, அனுசரணை, இணக்கம் ஆகியவற்றுடனும் – நிறைவேற்றப்பட்டு வந்த தீர்மானங்கள் அவற்றைத்தான் எமக்கு எடுத்தியம்பி நிற்கின்றன.

நீதியை நிலைநாட்டும் – அல்லது நீதியைத் தேடும் சர்வதேசத்தின் அந்தப் பங்களிப்புக்கு அல்லது சர்வதேசம் நிறைவேற்ற முயலும் அதன் கடப்பாட்டுக்கு இடமளிப்பதே இல்லை என்பதே தங்களின் உறுதியான நிலைப்பாடு என்பதை இந்த இரண்டு பிரதான கட்சிகளினதும் ஜனாதிபதி வேட்பாளர்களும் பொது மேடைகளில் திரும்பத் திரும்ப உறுதிப்படுத்தி வருகின்றனர்.

நிச்சயமாக இந்த இரண்டு பேரில் ஒருவரே இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று அடுத்த ஜனாதிபதியாக வரப்போகின்றார் என்பது உறுதியான நிலையில், தேர்தலின் பின்னர் நிலைமை எவ்வாறு அமையும் என்பதை இப்போதே எம்மால் ஊகிக்கக் கூடியதாக இருக்கின்றது.

தற்போதைய அரசு சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து தேசிய பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது எனப் பகிரங்கமாகக் கூறியுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை தொடர்பாக ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைத் தாம் குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாசி விடுவார் என்றும், தாம் ஜனாதிபதியானால் அந்தத் தீர்மானங்கள் தம்மையோ, நாட்டையோ கட்டுப்படுத்தா என்ற முடிவையே தாம் பின்பற்றுவார் என்றும் கூறியிருக்கின்றார்.

யுத்தக் குற்றங்கள், மோசமான மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்றவை தொடர்பில் குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை புதிய இராணுவத் தளபதியாக நியமித்தமை தொடர்பில் அமெரிக்காவும், பிற சர்வதேச நாடுகளும், சர்வதேச பொது அமைப்புகளும் கொதித்துப் போய் இருக்கின்றன.

இந்த நியமனத்தினால் இலங்கையுடனான இராணுவத் தொடர்பாடல்கள் மிக மோசமான இழி நிலைக்குச் சென்றிருப்பதாக அமெரிக்கா உத்தியோகபூர்வமாகவே கோடி காட்டியிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில், தாம் ஜனாதிபதியானால் புதிய இராணுவத் தளபதியை பதவியிலிருந்து நீக்கிவிடுவார் என்ற குற்றச்சாட்டை ஒரேயடியாக மறுதலித்துள்ள புதிய தேசிய முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸா, இராணுவத் தளபதி குறித்துப் பேசும் நாடுகளை நீங்கள் உங்கள் பிரச்சினைகளை (வேலைகளை) பார்த்துக் கொள்ளுங்கள் என்று தாம் கூறிவிடுவார் எனவும் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

சரியோ, பிழையோ நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் மூலம் கோட்டாபய ராஜபக்ஷ அல்லது சஜித் பிரேமதாஸா ஆகிய இருவரில் ஒருவரே ஜனாதிபதியாவார் என்பதும், அவர்கள் இருவருமே, தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் சர்வதேச சமூகத்துடன் முட்டி மோதி, முரண்பட்டு நிற்பதையே தமது கொள்ளைக் கோட்பாடாகக் கோடி காட்டியிருக்கின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்த இருவரில் யார் ஜனாதிபதியானாலும் அதுதான் நிலைமை.

நாட்டின் தலைவராகப் போகின்றவர் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தில் பார்வையாளர்களான சர்வதேச சமூகத்துடன் முண்டி – முரண்பட்டு – போகத் தீர்மானிக்கும் சமயத்தில், சர்வதேச சமூகத்தை அரவணைத்து நம் பக்கம் அதன் பார்வையையும் ஆதரவையும் திரும்ப வைப்பதே சிறுபான்மையினரான எங்களது வெற்றித் தந்திரோபாயமாக இருக்கவேண்டும்.

நாங்கள் – சிறுபான்மையினர் – அதைச் செய்வதற்கு நமக்குள்ளும், அடுத்து நமக்கு வெளியில் இருக்கும் மாற்றுச் சிறுபான்மையினருடனும் மிகுந்த ஐக்கியம் உடையவர்களாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் இலங்கையின் புதிய ஆட்சிப் பீடத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையில் மூளும் முரண்பாட்டை எமக்கு – எமது இனத்துக்கு – சாதகமானதாக நாம் மாற்றிக் கொள்ளமுடியும்.

வரலாற்று வாய்ப்பாகக் கிட்டியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்துவதற்கு எமக்குள் ஐக்கியம் முக்கியம்.

அது – ஐக்கியம் – ஒற்றுமை – கிலோ என்ன விலை என்று கேட்கும் அவல நிலைதான் எம்மத்தியில் உள்ளது. அதுதான் எமக்கான பெரும் சாபக்கேடு.

# அரசின் செயற்பாடுகளால் பொருளாதாரம் பாதிப்பு!

## கவலைப்படுகிறார் கோட்டாபய



அரசின் செயற்பாடுகள் காரணமாக நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரக் கட்டமைப்பும் ஸ்தம்பிதமடைந்துள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷவை அவமானம் செய்வதற்காகவே மத்தளை சர்வதேச விமான நிலையத்தை நெல்களஞ்சியசாலையாக மாற்றினார்கள்.

இதனால், ஒட்டுமொத்த மக்களும் அதிருப்தியடைந்தார்கள். இவ்வாறான அரசின் செயற்பாடுகளால் இன்று இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரக் கட்டமைப்பும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. இதுதான் இன்றைய நிலைமையாக இருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும் என்பதைத் தான் மக்கள் எம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்.

அன்று விடுதலைப் புலிகளை நாம் தோற்கடித்தோம். இதற்குப் பின்னர் புலிகளின் தலைவராகக் கருதப்பட்ட கே.பி. எனும் குமரன் பத்மநாதன் மலேசியாவில் இருந்துகொண்டு அறிக்கையொன்றை வெளியிட்டார்.

ஆனால், நாம் அப்போதே புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் குறுகிய காலத்திலேயே அவரைக் கைது செய்து இலங்கைக்கு கொண்டு வந்தோம். எனினும், இந்த அரசு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் முன்கூட்டியே சர்வதேச புலனாய்வுப் பிரிவுகள் வழங்கியும், மக்களுக்கான பாதுகாப்பை வழங்கத் தவறிவிட்டது.

சர்வதேசத்தின் ஆலோசனைக்கு இணங்கச் செயற்படும் மற்றும் இராணுவத்தினருக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்படும் அமைச்சரவையொன்றினால், எமது நாட்டின் தேசிய பாதுகாப்பை பலப்படுத்த முடியாது – என்றார். (ஐ)

# முல்லைத்தீவில் 75,381 பேர் வாக்களிக்க தகுதியுள்ளோர்

முல்லைத்தீவில் 75 ஆயிரத்து 381 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனவும்,134 நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஒழுங்குகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் என்ற வகையில் தேர்தல் திணைக்களத்துடன் இணைந்து பல்வேறு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 75 ஆயிரத்து 381பேர் இருக்கிறார்கள். இவர்கள் வாக்களிப்பதற்காக 134 வாக்களிப்பு நிலையங்கள் மாவட்டம் முழுவதுமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று வாக்கு எண்ணும் நிலையங்கள் 9 ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் வாக்கெடுப்பு நிலையங்களின் ஆரம்ப நடவடிக்கைகளைத் தயார் செய்யும் ஏற்பாடுகளைப் பிரதேச செயலர் ஊடாகக் கிராம அலுவலர்கள் முன்னெடுத்து வருகின்றார்கள்.

வாக்கெண்ணும் நிலையங்கள் இம்முறை எமது மாவட்ட செயலக வளாகத்தில் உள்ள கட்டடங்களில் அமைக்கப்படவுள்ளன. 9 வாக்கெண்ணும் நிலையங்கள் மாவட்ட செயலகத்துக்குள்ளேயே அமைய இருக்கின்றன – என்றார். (ஐ)

# குற்றவாளிகளுக்கு சஜித் எச்சரிக்கை!



கொழும்பு, ஒக். 29

நாட்டிலுள்ள அனைத்துப் பாதாளக்குழுவினர் உள்ளிட்ட அனைத்துக் குற்றவாளிகளையும் எதிர்வரும் 16ஆம் திகதிக்குள் ஓய்வு பெற்றுக் கொள்ளுமாறு, புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

தூக்குமேடை பற்றி இவர்கள் பேசினார்கள். மின்சாரக் கதிரைக் குறித்து பேசினார்கள். இவையெல்லாம் மக்களுக்கு ஞாபகம் உள்ளனவா?

முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையினர் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புத் தரப்பினருக்கும் பாதுகாப்பை வழங்குவேன் என்பதை நான் இவ்வேளையில் உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

52 வயதுடைய எனக்கு மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய சக்தி இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. நான் ஜனாதிபதியாக விரும்புவது, அரச மாளிகைகளில் சொகுசு வாழ்க்கையை வாழ்வதற்கு அல்ல.

மக்களுக்குச் சேவை செய்வதே எமது நோக்கமாகும். அரச மாளிகைகள் அனைத்தும் மக்களுக்கு வழங்கப்படும். எனக்கும் சில சந்தர்ப்பங்களில் களைப்பு ஏற்படும். அப்போதெல்லாம் எனக்கு எனது தந்தையின் முகம் தான் தோன்றும்.

இதனை அடுத்து எனக்கு மீண்டும் உற்சாகம் கிடைத்துவிடும். அடுத்த 16 ஆம் திகதி அமைக்கப்படும் எமது அரசு தூய்மையான அரசாக இருக்கும்.

இதில் எந்தத் திருடர்களுக்கும் இடமில்லை. பாதாளக் குழுவினர் உள்ளிட்ட அனைத்துக் குற்றவாளிகளுக்கும் இவ்வேளையில் நான் ஒன்றைக் கூறிக்கொள்கிறேன்.

அனைவரும் இப்போதே உங்கள் வேலைகளில் இருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளுங்கள். அல்லாவிட்டால், 16 ஆம் திகதிக்கு பின்னர் பாரிய நட்டஈட்டை வழங்க வேண்டியேற்படும்.

4 வருடங்களாக இருந்த இதே ஆட்களுடன் தான், நாம் எமது அடுத்த கட்டப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாகச் சிலர் கூறுகிறார்கள்.

ஆனால், இவ்வாறான ஆட்களுடன் பயணத்தை மேற்கொள்ள நான் என்றும் தயாரில்லை என்பதை இவ்வேளையில் கூறிக்கொள்கிறேன் – என்றார். (ஐ)

**நாளை** 30.10.2019 புதன்கிழமை

நட்சத்திரம்: அனுசம் பி.இ 1.59 வரை
திதி : துதியை காலை 6.53 வரை
இராகுகாலம் : 12.03 – 1.33
சுப நேரம் : 4.33 – 6.03

# திருவடிநிலையில் தனியார் காணிகளை கடற்படைக்குச் சுவீகரிப்பதற்கு முயற்சி!



## மக்கள் எதிர்ப்பால் அது இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 29

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு உள்பட்ட மாதகல் – பொன்னாலை வீதியில் தனியார் காணிகளைக் கடற்படை முகாமுக்கு அபகரிப்பதற்காக அளவீடு செய்ய வருகை தந்த அதிகாரிகள் மக்களின் எதிர்ப்பால் திரும்பிச் சென்றனர்.

சுழிபுரம் திருவடி நிலைப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 4 ஏக்கர் காணி கடற்படை முகாமுக்குச் சுவீகரிப்பதற்காக அளவீடு செய்யப்படவுள்ளதாக அறிந்த உள்ளூர் மக்கள் நேற்றுக் காலை 8 மணியளவில் அந்தப் பகுதியில் திரண்டனர்.

வலி.மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் நடனேந்திரன், கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்டோரும் அங்கு வருகை தந்தனர்.

இந்த நிலையில் காணிகளை அளவீடு செய்வதற்காக நில அளவைகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் அங்கு வருகை தந்தனர்.

அவர்கள் அளவீட்டுப் பணிகளை முன்னெடுக்க மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். அதனால் மக்களிடமிருந்து எழுத்துமூல மனுவைப் பெற்றுக் கொண்டு அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

அதிகாரிகள் மீள வரலாம் என எதிர்பார்க்கும் மக்கள் அந்த இடத்தில் திரண்டிருந்தனர். (ஐ – 07)



## ஐ.எஸ். தலைவர் கொலை; பிரதமர் ரணில் மகிழ்ச்சி



கொழும்பு, ஒக். 29

ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி அமெரிக்கப் படைகளால் கொல்லப் பட்டமை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ் தலைவர் பக்தாதி கொல்லப்பட்டதை நேற்று முன் தினம் அமெரிக்க அதிபர் டிரம்ப் உறுதிப்படுத்திய சற்று நேரத்தில், பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

உலகளாவிய பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான முயற்சிகளுக்காக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் அமெரிக்க படையினருக்கு தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## சஜித்தின் கூற்று வேடிக்கை!

### அநுரகுமார திஸநாயக்க காட்டம்

மட்டக்களப்பு, ஒக். 29

அடிப்படைவாதிகளைச் சூழ வைத்துக்கொண்டு, தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதாக ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கூறுவதானது வேடிக்கையான விடயமாகும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஈஸ்டர் தாக்குதல் என்பது கத்தோலிக்க மக்களை மட்டுமன்றி, முஸ்லிம் மக்களையும் இலக்கு வைத்து நடத்தப்பட்ட ஒரு தாக்குதலாகவே நாம் கருதுகிறோம்.

முஸ்லிம்கள் என்றும் அடிப்படைவாதத்துக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

எமது அரசியல் பயணமும் அவ்வாறுதான் காணப்படும். எமது அரசியலில் இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் என்றும் அனுமதி இருக்காது.

அடிப்படைவாதத்தைத் தோற்கடிக்காமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. இன்று சஜித் பிரேமதாஸவின் பிரசார மேடைகளைக் கவனியுங்கள்.

அது அடிப்படைவாதிகளால்



நிரம்பிப் போயுள்ளது. இவ்வாறான நபர்களைச் சூழ வைத்துக்கொண்டு தான் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவதாக இவர்கள் கூறுகிறார்கள்.

சஜித் பிரேமதாஸவுக்கு அளிக்கும் வாக்குகளைக் கோட்டாவுக்கே அளித்துவிடலாம். ஏனெனில், இவர்களிடத்தில் வித்தியாசங்கள் கிடையாது – என்றார். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 16

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

இலங்கை வங்கி பிரதேசம் சுன்னாகம், புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்ச வீடு, கற் கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3 ஆம் குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**

உளுக்குளம் பிரதேசத்திலும் –

**நாளை புதன்கிழமை**

**வவுனியா பிரதேசத்தில் -**

உளுக்குளத்திலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

சிலாவத்துறை சந்தியிலிருந்து முள்ளிக்குளம் வரை, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## சஜித் வென்றதும் குடும்ப சகிதம் சிறை செல்வர் ராஜபக்ஷவினர்!



கொழும்பு, ஒக். 29

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதியாகியுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இறக்குவானை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், சஜித் வெற்றி பெற்றதும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகள் நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதனைத் தொடர்ந்து, ராஜபக்ஷவினர் அனைவரும், குடும்ப சகிதமாகச் சிறைக்கு அனுப்பப்படுவார்கள் என அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

## அரசியலிலிருந்து இப்போதைக்கு ஓய்வு பெறாராம் பிரதமர் ரணில்!

கொழும்பு, ஒக். 29

அரசியலில் இருந்து ஓய்வுப் பெறும் எண்ணம் தனக்கு இது வரை ஏற்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக தற்போது அனைவரும் கதைக்கிறார்கள். ஆனால், குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய அனைவரையும் நாம் இன்று கைது செய்துள்ளோம்.

சட்டத்துக்கு உட்பட்டே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதற்காக எமக்கு வெள்ளை வான்கள் தேவைப்படவில்லை.

இவர்கள் அனைவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும். தற்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையும் எமக்கு கிடைத்துள்ளது.

இதற்கிணங்க, பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக புதிய சட்டத் திட்டங்களை வகுக்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அத்தோடு, எனது அரசியல் வாழ்க்கையின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாகக் கேள்விகள் எழுப் பப்படுகின்றன. ஆனால், இப்போதே நான் ஓய்வுப் பெறவேண்டியத் தேவையில்லை என்றே கருது கிறேன்.

என்னைப் பொறுத்தவரை இந்த நாட்டை கடன் இல்லாத நாடாக மாற்றவேண்டும் என்பதுதான் இப்போதைய ஒரே நோக்கமாகும் – என்றார். (ஐ)

## நாடு திரும்பினார் மைத்திரி!



*கொழும்பு, ஒக். 29*

*ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியுள்ளார்.*

*ஜனாதிபதி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நாடு திரும்பியுள்ளார்.*

*நேற்று முன் தினம் இரவு 11.35 மணியளவில் சிங்கப்பூரிலிருந்து வந்த எஸ்.கியு. 468 என்ற விமானம் மூலம் ஜனாதிபதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.*

*புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஜப்பானிய பேரரசர் நருஹிதோவின் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக, கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜப்பானுக்குச் சென்றிருந்தார். (ஐ)*



## விதி மீறித் தீபாவளிப் பட்டாசு வெடிப்பு; இதுவரையில் மொத்தம் 18 வழக்குகள்

சென்னை,ஒக்.29

தீபாவளி நாளில் விதி மீறி பட்டாசு வெடித்ததாக வடசென்னையில் 18 வழக்குகள் பதிவாகியுள்ளன.

நீதிமன்ற அனுமதிக்காத நேரத்தில் பட்டாசு வெடித்ததாக சென்னை திருவெற்றியூரில் மட்டும் 5 வழக்கு கள் பதிவாகியுள்ளன. வண்ணாரப் பேட்டை – 4, கொருக்குப்பேட்டை –4, புதுவண்ணாரப்பேட்டை – 3, ஆர்.கே.நகர் –2, திருவொற்றியூர் – 5 என மொத்தம் 18 வழக்குகள் போடப்பட்டுள்ளன.

தீபாவளி நாளில் காலை 6 முதல் 7 மணி வரை, மாலை 7 மணி முதல் 8 மணிவரை மட்டுமே பட்டாசு வெடிக்க உச்சநீதிமன்றம் அனுமதி அளித் துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்ச்சைக்குரிய அயோத்தி வழக்கு; தீர்ப்பு 17ஆம் திகதிக்கு முன்னர்!

புதுடில்லி,ஒக்.28

அயோத்தியில் பாபரி மசூதி இருந்த சர்ச்சைக்குரிய நிலம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 17ஆம் திகதி வெளியாகும் போது, டில்லியில் முகாமிட, ஆர்.எஸ்.எஸ். இயக்கத் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

உத்தரப் பிரதேச மாநிலம், அயோத்தி யில் சர்ச்சைக்குரிய நிலம் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பான வழக்கை, உச்ச நீதமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்து, தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது. தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் அடுத்த மாதம், 17 ஆம் திகதி ஓய்வு பெறுகிறார். அதற்கு முன், அயோத்தி தீர்ப்பு வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அயோத்தி தீர்ப்பு வெளியாகும் போது, டில்லியில் முகாமிட ஆர்.எஸ்.எஸ்., தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து, ஆர்.எஸ்.எஸ்., வட்டாரங் கள் கூறியவை வருமாறு: –

ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாக வத், பொதுச் செயலர் சுரேஷ் பையாஜி ஜோஷி மற்றும் இணைச் செயலர்கள் பலரும் டில்லியில் அடுத்த மாதம், 12ஆம் திகதி முதல் சுற்றுப்பயணம் மேற்கொள் கின்றனர். அப்போது, அயோத்தி தீர்ப்பு



வெளியானபின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி அவர்கள் விவாதிக்க உள்ளனர். ஹிந் துக்களுக்கு சாதகமான தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கை இருந்தாலும், வேறு விதமாக வந்தால் அது பற்றி ஆலோசிக்கவே தலை வர்கள் டில்லியில் கூட உள்ளனர். – இவ் வாறு, ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள் தெரி வித்தன.

## மதுரை ஜல்லிக்கட்டைப் பார்க்க ரஷ்ய அதிபர் புடின் வருகின்றார்!



மொஸ்கோ,ஒக்.29

மதுரை அலங்காநல்லூரில் பிரபலமான ஜல்லிக் கட்டு போட்டிகளை காண்பதற்காக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தமிழகம் வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீன அதிபர் ஜீ ஜின்பிங்கும், பிரதமர் நரேந்திர மோடியும் கடந்த 11ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை மாமல்லபுரத்தில் சந்திப்புக் கூட்டத்தை நடத்தி னர். இதனால் மாமல்லபுரம் மிகப் பெரிய அங்கீகாரத் தைப் பெற்றது.

இந்த நிலையில் சீன அதிபரைத் தொடர்ந்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும் தமிழகத்துக்கு வருகை தருகிறார் எனத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

அதாவது மதுரையில் ஜனவரி மாதம் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகளைக் காண்பதற்காக அவர் தமிழகம் வருகை தருகிறார் என தெரிகிறது. அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு உலக புகழ்பெற்றதாகும்.

இந்த போட்டிகளை தமிழக அரசும் ஜல்லிக்கட்டு ஆதரவு அமைப்புகளும் சேர்ந்து நடத்துகின்றன. இந்த போட்டியை புடின் காண வந்தால் இது மேலும் புகழ்பெறும் என்பது நிர்சனம்.

## மராட்டியத்தில் பா.ஜ.கவுக்கு எதிராக ஒன்றிணைய சிவசேனாவுக்கு காங்கிரஸ் கட்சி திடீர் யோசனை

மும்பை,ஒக்.29

மகராஷ்டிராவில் பாரதீய ஜனதா ஆட்சி அமைப்பதைத் தடுக்க அனை வரும் ஒன்றிணைய வேண்டும் என சிவசேனாவுக்கு காங்கிரஸ் திடீர் யோசனை தெரிவித்து உள்ளது.

மராட்டிய சட்டசபை தேர்தல் முடி வில் எந்தக் கட்சிக்கும் தனித்துப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. கூட்டணிக் கட்சிகளான பா.ஜனதா, சிவசேனா இடையே ஆட்சி அமைப் பதில் இழுபறி ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில் சிவசேனா தலைமையில் ஆட்சி அமைய தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் ஆதரவு அளிக்க வாய்ப்பு இருப் பதாகக் கூறப்பட்டு வந்தது. ஆனால் சிவசேனாவுக்கு ஆதரவு அளிக்கும் திட்டம் இல்லை என்று அந்த கட்சிகள் மறுத்து வந்தன.

இந்த நிலையில் மராட்டிய சட்ட




சபை எதிர்க்கட்சி (காங்கிரஸ்) தலைவர் விஜய் வடேடிவார் நேற்று முன்தி னம் அளித்த பேட்டியில் கூறியிருப் பவை வருமாறு: –

எங்களை எதிர்க்கட்சியாக இருந்து பணியாற்ற மக்கள் தீர்ப்பு அளித்து உள்ளனர். இருப்பினும் பா.ஜனதா ஆட்சியமைப்பதை தடுத்து நிறுத்த நாம் ஒன்றாக செயல்படுவது அவசியமாகும். சிவசேனா இதற்கு முன்வர வேண்டும். பா.ஜனதாவிற்கு எதிராக மக்கள் தீர்ப்பு அளித்து இருப்பதால் சிவசேனா மாற்று ஏற்பாடுகளுக்கு முன்வர வேண்டும்.

ஆனால் இதுகுறித்து சிவ சேனாவுடன் காங்கிரஸ் எந்த பேச்சும் தொடங்கவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

சிவசேனாவுக்கு காங் கிரஸ் தெரிவித்து உள்ள இந்த புதிய யோசனை மராட்டிய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆனால், இதை சிவசேனா ஏற்குமா? நிராகரிக்குமா? என்று தெரியவில்லை.

முன்னதாக, ஆட்சியமைக்க தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் ஆதரவை கோரும் வகையில் சிவ சேனா மூத்த தலைவர் சஞ்சய் ராவத் எம்.பி. கேலிச்சித்திரம் வெளியிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச விமான ஒழுங்குமுறை அமைப்பிடம் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா முறையிடும்

புதுடெல்லி,ஒக்.29

பாகிஸ்தானுக்கு எதிராக சர்வதேச விமான ஒழுங்கு முறை அமைப்பிடம் முறைப்பாடு அளிக்க இந்தியா முடிவு செய்திருப்பதாகத் தகவல்கள் கூறு கின்றன.

சவுதி அரேபிய மன்னரின் அழைப்பை ஏற்று பிரதமர் மோடி 2 நாள் பயண மாக நேற்று சவுதி அரேபியாவுக்கு புறப் பட்டார். அங்கு தங்கி இருக்கும் அவர், ரியாத்தில் நடைபெறும் எதிர்கால முதலீட்டு நிறுவன மன்றத்தின் 3 அவது அமர் வில் கலந்து கொள்கிறார். இந்த பயணத் தின்போது பாகிஸ்தான் வான்வழியை பயன்படுத்தி செல்ல இந்தியா சார்பில் அந்நாட்டிடம் அனுமதி கோரப்பட்டது.

ஆனால், அவர் செல்லும் விமானம் சவுதி அரேபியா சென்றடைவதற்கு பாகிஸ்தான் வான்வழியை பயன்படுத் துவதற்கு பாகிஸ்தான் அரசு அனுமதி தர மறுத்துள்ளது. இதனை பாகிஸ்தான் வெளியுறவுத்துறை மந்திரி ஷா முக மது குரேஷி இந்திய உயர் அதிகாரி ஒருவருக்கு எழுத்துபூர்வமாக அறிக் கையாக அனுப்பினார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

காஷ்மீர் மாநிலத்துக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரசு பிரதமர் மோடி செல்லும் விமானத்தை தன் வான்வெளியில் அனுமதிக்க தடை விதித்து வருகிறது. அதேபோல் ஜனாதி பதி ராம்நாத் கோவிந்த. பயணம் செய்த விமானம் செல்வதற்கும் பாகிஸ்தான் அனுமதி மறுத்தது.

இந்த நிலையில், பாகிஸ்தானுக்கு எதிராக சர்வதேச விமான ஒழுங்கு முறை அமைப்பிடம் (ICAO) முறைப்பாடு அளிக்க இந்தியா முடிவு செய்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.



# உலகம் இனிமேல் பாதுகாப்பாக இருக்குமாம் பாக்தாதி கொல்லப்பட்டமை குறித்து டிரம்ப்!

வொஷிங்டன்,ஒக்.29

ஐ.எஸ். தலைவர் அபு பக்கர் அல் பாக்தாதி கொல்லப்பட்டார் என அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

சிரியாவில் அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில், பெண்கள், குழந்தைகள் உள்பட லட்சக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்து உள்ளனர்.



அந்நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இது அரசுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. சிரியாவில் உள்ள ஐ.எஸ். அமைப்பின் தலைவராக அபு பக்கர் அல் பாக்தாதி (வயது 48) செயல்பட்டு வருகிறார்.

அவர்களைக் கட்டுப்படுத்த அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படைகள் அந்நாட்டு அரசுடன் இணைந்து பதிலடித் தாக்குதலை நடத்தி வருகின்றன. இந்த நிலையில், சிரியாவின் வடமேற்கே இத்லிப்பில், அல் பாக்தாதி பதுங்கி இருக்கிறார் என உளவு அமைப்பின் தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து அமெரிக்க இராணுவ படைகள் அந்த பகுதிக்கு சென்று தாக்குதலில் ஈடுபட்டன. இதில், அல் பாக்தாதி கொல்லப்பட்டுள்ளார் என சிரிய அரசு உறுதிப்படுத்தி உள்ளதுடன் இந்த தகவலை ஈரான் அரசுக்கும் தெரிவித்தது.

இந்நிலையில், ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பாக்தாதி கொல்லப்பட்டார் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிவிப்பில் –

வடமேற்கு சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் கடந்த சனிக்கிழமை இரவு அமெரிக்க படைகள் நடத்திய தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க படை மிக சிறப்பாக இந்த தாக்குதலை நடத்தி உள்ளது. இந்த தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் யாரும் உயிரிழக்கவில்லை. இந்தத் தாக்குதலில் பக்தாதியின்பாதுகாவலர்கள், ஐ.எஸ்.தீவிரவாதிகள்பலர் மரணம் அடைந்தனர்.

அதில் அபுபக்கர் அல் பாக்தாதியும் ஒருவர். உலகம் இனி பாதுகாப்பாக இருக்கும்-எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்துக் கருத்து வெளியிட்ட டிரம்ப் –

அபுபக்கர்அல்பக்தாதி நாயைப் போல மரணத்தை தழுவினான் என்றும் அவன் ஒரு கோழையைப் போல் அழுதபடி உயிரிழந்தான் எனவும் கூறினார்.

அல்பக்தாதியால் மனித குலத்திற்கு இனி எந்த வித அச்சுறுத்தலும் இருக்காது என்றார் அவர்.

அமெரிக்கக் கூட்டுப் படைகள் சிரியாவின் பரிஷா பகுதியில் அவன் மறைந்திருந்த ஒரு வீட்டை முற்றுகையிட்டு குண்டுகளை வீசிய போது உயிருக்கு அஞ்சி கதறி அழுத பக்தாதி ஒரு கோழையைப் போல தப்பி ஓட முயற்சித்தான் எனவும், சுரங்கம் வழியாக தப்ப முயற்சித்தான் எனவும், அது நிறைவேறாததால் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்து தனது மூன்று குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொண்டான் எனவும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

உலகம் இப்போது பாதுகாப்பான இடமாகி விட்டது என்றும் பக்தாதியால் இனி எந்த ஒரு மனித உயிருக்கும் அச்சுறுத்தல் இல்லை என்றும் டிரம்ப் தெரிவித்தார்.

மேலும் ரஷ்யா, துருக்கி, சிரியா, ஈராக், குர்து படைகளுக்கும் நன்றி என்று டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

2012 ஆண்டில் இருந்து தீவிரவாதி அபுபக்கர் அல் பக்தாதி தேடப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீங்கள் உருவாக்கியதை நீங்களே கொன்றீர்கள்!

## அமெ. நடவடிக்கை குறித்து ஈரான் கருத்து

தெஹ்ரான்,ஒக்.29

நீங்கள் உருவாக்கிய ஐ.எஸ். அமைப்பின் தலைவனை நீங்களே கொன்றிருக்கிறீர்கள் என அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ஈரான் கருத்து தெரிவித்துள்ளது.

உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றுதான் ஐ.எஸ். அமைப்பு.

இந்தப் பயங்கரவாதிகளை ஒழிக்க அமெரிக்கா, ரஷ்யா, ஈராக், சிரியா உள்பட பல நாடுகள் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதல்களை நடத்தின.

இதற்கிடையில், பல ஆண்டுகளுக்கு பிறகு நேற்று முன்தினம் சிரியாவின் இட்லிப் பகுதியில் அமெரிக்காவின் அதிரடிப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் ஐ.எஸ். அமைப்பின் தலைவன் அபுபக்கர் அல் – பக்தாதி கொல்லப்பட்டுவிட்டார் என அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஈரான் கருத்து தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் தகவல் மற்றும் தொழில்நுட்பத்துறை மந்திரி முகமது ஜாவத் அசாரி இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட செய்தியில், ' ஐ.எஸ். அமைப்பின் தலைவன் அபுபக்கர் அல்-பக்தாதி கொல்லப்பட்டமை ஒன்றும் மிகப்பெரிய விஷயம் இல்லை. நீங்கள் உருவாக்கியதை நீங்களே கொன்றிருக்கிறீர்கள்' என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஈரான் அரசின் செய்திதொடர்பாளர் அலி ரபிய் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட செய்தியில், 'பக்தாதி கொல்லப்பட்டு விட்டாலும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கான பாதை இன்னும் அழிக்கப்படவில்லை. அல்கொய்தா அமைப்பின் தலைவன் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பிறகும் அந்த பயங்கரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது. அதே போல்தான் ஐ.எஸ். அமைப்பும். வெடி குண்டுகளாலும், ஆயுதங்களாலும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பை ஒழிக்கமுடியாது. அந்த அமைப்பு இன்னும் வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது' – என அவர் தெரிவித்தார்.

# கொலம்பியாவில் இராணுவ ஹெலி வீழ்ந்ததில் அதிலிருந்த 6 பேரும் பலி



போகோடா,ஒக்29

கொலம்பியாவில் இராணுவ ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளான சம்பவத்தில் அதில் பயணித்த 6 பேர் உயிரிழந்தனர்.

மத்திய அமெரிக்க நாடான கொலம்பியாவின் பலன்கியூரோ இராணுவத் தளத்தில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு விமானப்படைக்கு சொந்தமான ஒரு ஹெலிக்கொப்டர் 6 பேருடன் புறப்பட்டது.

அது புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. இதையடுத்து, மாயமான ஹெலிக்கொப்டரைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவந்தன.

இந்நிலையில், அந்நாட்டின் அல்பன் பகுதியில் ஹெலிக்கொப்டர் விழுந்து விபத்துக்குள்ளானதை மீட்புக்குழுவினர் கண்டுபிடித்தனர். இந்த விபத்தில் ஹெலிக்கொப்டரில் பயணம் செய்த 6 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணை நடைபெற்றுவருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டர் கொலாம்பியா அதிபர் பயணிக்க அவ்வப்போது உபயோகப்படுத்தப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.எஸ். தலைவர் அல் பாக்தாதி கொல்லப்பட்டமை எங்ஙனம்?

## அதிபர் டிரம்ப் விளக்கம்

ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல் பாக்தாதி கொல்லப்பட்டமை குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்நிருபர்களுக்கு நேற்று வெள்ளை மாளிகையில் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

ஏறக்குறைய 3 ஆண்டுகள் தேடுதலுக்குப்பின் அமெரிக்கப் படையினருக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஆம், உலகத்தை அச்சுறுத்திவந்த ஐ.எஸ். தீவிரவாத தலைவர் அல் பாக்தாதியை அமெரிக்க ராணுவத்தின் கே9 டாக்ஸ் இராணுவப் பிரிவு சிரியாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஒரு குகையில் வைத்து கொலை செய்துள்ளது.

தப்பிச்செல்ல வேறுபாதை இல்லாத அந்த குகைக்குள் அல் பாக்தாதி, அவரின் 3 மகன்கள் உயிரைக் காத்துக்கொள்ள ஓடினார்கள். தப்பிச் செல்ல வேறு வழியில்லாததால், தங்கள் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து உயிரிழந்தனர்.

அல் பாக்தாதி கொல்லப்பட்ட இரவு அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, உலகிற்கே சிறப்பான இரவு. உலகில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த கொடூரமான கொலைகாரர் அழிக்கப்பட்டார்.

இனிமேல் எந்த அப்பாவி மக்களுக்கும் அவரால் துன்பம் வராது. ஒரு நாயைப் போன்று, கோழையைப் போன்று அல் பாக்தாதி உயிரிழந்தார். இனிமேல் இந்த உலகம் பாதுகாப்பானதாக இருக்கும்.

அமெரிக்க இராணுவத்தின் சிறப்பு படையினர் சனிக்கிழமை இரவு மிகவும் ஆபத்தான முறையில் பாக்தாதி இருந்த இடத்தில் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள். ஒரு கட்டத்தில் பாக்தாதி அமெரிக்கப் படையினரிடம் இருந்து தப்பிக்க ஒருவழிப்பாதை உள்ள குகைக்குள் ஓடினார்.

அப்போது எங்களின்ராணுவமும் துரத்தி ஓடும் போது, படைகளிடம் சிக்குவதைத் தவிர்க்கும் பொருட்டு, உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார்கள். இதில் பாக்தாதியின் உடல் சிதைக்கப்பட்டது.

பாக்தாதி உயிரிழக்கும் முன் நோய்வாய்ப்பட்டவராக, பலவீனமாக இருந்தார். ஆனால், அமெரிக்கப் படைகள் துரத்தும்போது, கோழையைப் போன்று குகைக்குள் ஓடி ஒளிந்து, கண்ணீர் விட்டு அழத் தொடங்கினார்.

உலகத்தையே அச்சுறுத்திய ஒரு தீவிரவாத அமைப்பின் தலைவர் அல் பாக்தாதி, குகைக்குள் உயிரைக் காத்துக்கொள்ளத் தப்பி ஓடியதும், அச்சத்தால் கூனி குறுகியதும், அமெரிக்க படைகளைப் பார்த்து அஞ்சி அழுததும் வித்தியாசமாக இருந்தன.அதற்கான வீடியோ ஆதாரங்களும் கிடைத்துள்ளன.

அல்பாக்தாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்ததும் சுவர் இடிந்து



விழுந்தது. அதன்பின் அவரின் உடலை இராணுவத்தினர் கைப்பற்றி மரபணு ஆய்வுக்கு உட்படுத்திக் கொல்லப்பட்டவர் பாக்தாதி என்று உறுதி செய்தபின் அறிவிக்கிறேன்.

அல்பாக்தாதியைபலஆண்டுகளாக நாங்கள் தேடிவந்தோம்.கடந்த சில ஆண்டுகளாக அவரின் இருப்பிடத்தை நெருங்கித் தீவிர கண்காணிப்பில் கொண்டுவந்தோம்.

அமெரிக்க இராணுவத்தின் முக்கிய நோக்கமே பாக்தாதியை உயிருடன் பிடிப்பதும், அல்லது கொலை செய்வதும்தான். அதுதான் பிரதானமாக இருந்தது. என்னுடைய நிர்வாகத்தின் கீழ் நாட்டின் பாதுகாப்புத்துறையின் பிரதானக் குறிக்கோள் அதுவாகத்தான் இருந்தது.

கடந்த மாதம் ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்சா பின் லேடனை அமெரிக்கப் படைகள் கொன்றது. இப்போது உலகிற்கு அச்சுறுத்தலாக இருந்த ஐ.எஸ். அமைப்பின் தலைவரைக் கொன்றுவிட்டோம். இனிமேல் உலகம் அமைதியானதாக இருக்கும்.

சிரியாவில் அமெரிக்க படைகள் நடத்திய தாக்குதலில் ஏராளமான அல்பாக்தாதி ஆதரவாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள், கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

– இவ்வாறு டிரம்ப் தெரிவித்தார்

காலைக்கதிர்
Kalaikathir



# ஜனாதிபதித் தேர்தல்:

# பதவிக் கதிரையை பிடிப்பவர் யார்?



ரஞ்ஜன் அருண் பிரசாத்
பி.பி.சி தமிழுக்காக

இலங்கையில் நடைபெறும் எந்தவொரு தேர்தலையும் வெற்றி கொள்ள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் அதிகளவில் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வாக்காளர்களின் வாக்குகள் மிக முக்கியமானதாகும்.

இந்த நிலையில், எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் வாக்குகள் மிக அத்தியாவசியமாகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வாக்காளர்கள், இந்த தேர்தலில் அதிகளவில் வாக்குகளை பதிவு செய்தால், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கதாக அமையும் என அரசியல் ஆய்வாளரும், பேராதனை பல்கலைக்கழக அரசியல் பிரிவின் முன்னாள் பிரதம அதிகாரியுமான பேராசிரியர் நவரத்ன பண்டார தெரிவிக்கின்றார்.

குறிப்பாக, 70 சதவீத வாக்காளர்கள் வாக்களிக்க வந்தால், அது பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக அமையும் என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

மாற்று வாக்கு பதிவு (வாக்காளர்கள், யார் ஜனாதிபதியாக வேண்டுமென தாங்கள் விரும்புகின்ற முதலாவது தெரிவு, இரண்டாவது தெரிவு, மூன்றாவது தெரிவு என மூன்று பேருக்கு வாக்களிக்கும் முறை) என்ற நடைமுறையை பின்பற்றியே இந்த முறை தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

வாக்காளர்கள் தமது முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தெரிவுகளை பயன்படுத்த வேண்டிய நிலைமை இந்த முறைத் தேர்தலில் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

முதலாவது இடத்தை பிடிக்கும் வேட்பாளர், 50 சதவீத வாக்குகளை பெற்றுக் கொள்ளாத பட்சத்தில், இரண்டாவது தெரிவு கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படும் என பேராசிரியர் கூறுகின்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்களின் நடவடிக்கைகளும், தென் பகுதியிலுள்ள வாக்காளர்களின் நடவடிக்கைகளும் முற்றிலும் மாறுபட்டதாகவே அமையும் என பேராசிரியர் நவரத்ன பண்டார தெரிவிக்கின்றார்.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை என மூன்று தேர்தல் மாவட்டங்கள் காணப்படுகின்றன.

### இனவாதம் மற்றும் மதவாதம்

பெரும்பான்மை பௌத்த வாக்குகளை இலக்காக கொண்டு, இன மற்றும் மதவாதங்கள் தூண்டிவிடும் வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் வேட்பாளர்களுக்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரிய பின்னடைவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இலங்கையின் தென் பகுதியில் இனம், மதம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி வாக்குகளை பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பேராசிரியர் தெரிவிக்கின்றார்.

எனினும், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்கள் எதிரிகளாகவே காணப்படுவார்கள் எனவும் அவர் கூறுகின்றார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக 35 வேட்பாளர் போட்டியிடுகின்றனர்.

இலங்கை வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் அதிகளவிலான வேட்பாளர்கள் போட்டியிடும் முதல் தருணம் இதுவாகும். 2005, 2010 மற்றும் 2015 ஆகிய ஜனாதிபதித் தேர்தல்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் வேட்பாளர்களுக்கு பெரிய சவாலாக அமைந்திருந்தன.

### 2005 ஜனாதிபதித் தேர்தல்

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் வாக்குகள், முழு தேர்தலில் பெரிய தாக்கத்தை செலுத்தியிருந்தன. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 13 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் போட்டியிட்டனர்.

தேர்தலின் இறுதியில் மஹிந்த ராஜபக்ஷ 48, 87,152 வாக்குகளுடன் 50.3 சதவீதத்தையும், ரணில் விக்கிரமசிங்க 47,06,366 வாக்குகளுடன் 48.4 சத வீதத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இரண்டு வேட்பாளர்களுக்கும் இடையில் 1,80,786 வாக்கு வித்தியாசம் காணப்பட்டது.

இந்த தேர்தல் நடைபெறும் காலப் பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததுடன், அந்த பகுதிகளில் வாக்களிக்க விடுதலை புலிகள் தடை விதித்திருந்தனர்.

இந்த தடையானது, ரணில் விக்கிரமசிங்க தோல்வி அடைய பிரதான காரணமாக அமைந்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய தேர்தல் மாவட்டங்களில் 9,52,324 பதிவு செய்யப்பட்ட வாக்குகள் காணப்பட்ட போதிலும், 94,398 வாக்குகள் மட்டுமே பதிவாகியிருந்தன.

அதில் 71,321 வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றிருந்தார்.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடத்தக்களவு வாக்குகளைப் பெற்றார்.

குறிப்பாக, கிழக்கில் பெரும்பான்மை முஸ்லிம்கள் வாழ்கின்ற பகுதிகளில் 28,836 வாக்குகளை மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்டதோடு, ரணில் விக்கிரமசிங்க 1,21,514 வாக்குகளைப் பெற்றார்.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டங்களில் 9,53,936 வாக் காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

எனினும், 5,95,251 வாக் காளர்கள் மட்டுமே வாக்குகளை பதிவு செய்திருந்தனர்.

### 2010 ஜனாதிபதித் தேர்தல்

30 வருட கால யுத்தம் நிறைவடைந்த பின்னணியில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது.

இந்த தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் களமிறங்கியிருந்தனர்.

அந்த தேர்தலில் 22 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி மஹிந்த ராஜபக்ஷவும், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான பொது வேட்பாளராக சரத் பொன்சேகாவும் தேர்தலில் போட்டியிட்டனர்.

இந்த நிலையில், வட மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய தேர்தல் மாவட்டங் களில் அதிகளவிலான வாக்குகளை சரத் பொன்சேகா பெற்றுக் கொண்டார்.

வட மாகாணத்தில் 9,88,334 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டநிலையில், 2,98,898 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இதில் சரத் பொன்சேகா பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை 1,86,410 ஆகும்.

கிழக்கு மாகாணத்தில் சரத் பொன்சேகாவிற்கு 3,86,823 வாக்குகள் கிடைத்ததோடு, மஹிந்த ராஜபக்ஷவுக்கு 2,72,327 வாக்குகள் கிடைத்திருந்தன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் சரத் பொன்சேகா நுவரெலிய மாவட்டத்தில் மட்டுமே வெற்றிபெற்றிருந்தார்.

இந்த நிலையில், தமிழ் பேசும் சமூகம் அப்போதைய தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே வாக்களித்திருந்தது.

இதன்படி, 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 6,015,934 வாக்குகளைப் பெற்று இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து போட்டியிட்ட சரத் பொன்சேகா 4,173,185 வாக்குகளையே பெற்றிருந்தார்.

### 2015 ஜனாதிபதித் தேர்தல்

இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் மூன்றாவது முறையாகவும் தேர்தலில் போட்டியிட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது.

தனது பதவி காலம் நிறைவடைவதற்கு சுமார் இரண்டு வருடங்கள் இருந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இந்த தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக, அவரது கட்சியின் பொதுச்செயலாளராக பணியாற்றிய மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக களமிறங்கினார்.

இந்த நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்களின் வாக்குகளினால் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

2015ஆம் ஆண்டு வடக்கில் 7,82,297 வாக்காளர்கள் இருந்தனர். ஆனால், அந்தத் தேர்தலில் 5,31,014 வாக்காளர்கள் வாக்களித்தனர்.

வடக்கில் மைத்திரிபால சிறிசேனவுக்கு சுமார் 4 லட்சம் வாக்குகள் கிடைத்திருந்தன.

கிழக்கில் முஸ்லிம் மற்றும் தமிழ் வாக்குகளினால் மைத்திரிபால சிறிசேன அதிகப்படியான வாக்குகளை பெற்று வெற்றி பெற்றது சிறப்பு அம்சமாகும்.

**வழமை போன்று தமிழ், முஸ்லிம் வாக்காளர்களே தீர்மானிப்பர்!**

நாடு முழுவதுமாக 6,217,162 வாக்குகளுடன் 51.28 சத வீத வாக்குகளைப் பெற்று மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த அனைத்து தேர்தல்களிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகள் ஜனாதிபதியாக ஒருவரை தெரிவு செய்ய பெரும் செல்வாக்கு செலுத்தியுள்ள நிலையில், இந்த முறை தேர்தலும் அதே வகையில் அமையும் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். *



# யாழ். சர்வதேச விமான நிலையத்தை நீச்சல் தடாகம் என மஹிந்த கிண்டல்!



கொழும்பு, ஒக். 29
யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்றாவது சர்வதேச விமான நிலையம் இன்று நீச்சல் தடாகமாக மாறியுள்ளது என்று கிண்டலடித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் விமான நிலையம் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் திறக்கப்பட்டது. எனினும் இன்று அது நீச்சல் தடாகமாக மாறியுள்ளது. நாங்கள் நிர்மாணித்ததை இவர்கள் இன்று திறக்கின்றார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இலவசமாக மக்களுக்கு உரம் வழங்குவோம் என்பதனை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே கோட்டாபயவுடன் இணையுங்கள். நாங்கள் உங்களை நம்புகின்றோம். நீங்கள் எங்களை நம்புங்கள். நாங்கள் இந்த முறை வெற்றி பெறுவோம். எங்கள் வெற்றியின் பங்குத்தாரர்களாகுங்கள் என உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார். (ஐ)

# அனுரகுமாரவின் அரசில் 30 அமைச்சர்கள் மாத்திரம்



கொழும்பு, ஒக். 29
தேசிய மக்கள் சக்தி அரசில், 30 அமைச்சர்கள் மற்றும் 30 பிரதி அமைச்சர்கள் மாத்திரமே நியமிக்கப்படுவார்கள் என்று அந்த அமைப்பின் அதிபர் வேட்பாளராகப் போட்டியிடும், ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்க உறுதியளித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை அனுரகுமார திசநாயக்கவின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

அவரது தேர்தல் அறிக்கையிலேயே, 30 அமைச்சர்கள் மற்றும் 30 பிரதி அமைச்சர்கள் மாத்திரமே நியமிக்கப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது.

தமது அரசில் எந்தவொரு அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களோ, இராஜாங்க அமைச்சர்களோ நியமிக்கப்படமாட்டார்கள் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வகை வாக்குப் பெட்டிகள்

கொழும்பு, ஒக். 29
ஜனாதிபதித் தேர்தலில் மரப் பலகையால் ஆன வாக்குப்பெட்டிகளின் பாவனையைக் குறைப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

400 க்கும் குறைவான வாக்காளர்களைக் கொண்ட வாக்கெடுப்பு நிலையங்களுக்கு மாத்திரம் மரப்பலகையால் ஆன வாக்குப்பெட்டிகள் பயன்படுத்தப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னபிரிய தெரிவித்துள்ளார். அவ்வாறான வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை 340 ஆகும்.

இதேவேளை, இம்முறை காட்போட் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட 10,000 வாக்குப்பெட்டிகள் பயன்படுத்தப்படவுள்ளன. 800, 1500 மற்றும் 2500 வாக்குகளைக் கொள்ளக்கூடியதாக மூன்று பிரிவுகளில் இந்த வாக்குப் பெட்டிகள் தயாரிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது.

வடக்கு – கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் வாக்கெடுப்பு நிலையங்களுக்காக, முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னபிரிய கூறியுள்ளார். (ஐ)

# சிறுப்பிட்டியில் மினிபஸ் தீக்கிரை

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணம் – அச்சுவேலி சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்று உரிமையாளரின் வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தீயில் எரிந்து முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் சிறுப்பிட்டியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றது.

இனந்தெரியாதோரால் பஸ் தீயிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ – 07)





# மஹிந்த, கோட்டாபயவுக்கு யாழில் அதியுச்ச பாதுகாப்பு



யாழ்ப்பாணம், ஒக். 29
பிரசார நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் வந்த எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்குப் பொலிஸ் மற்றும் இராணுவத்தின் அதியுச்சப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.



யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் பொதுஜன பெரமுனவின் பிரசாரக் கூட்டம் நேற்று நடந்தது. இந்தப் பிரசார நடவடிக்கைக்காக நேற்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் யாழ்ப்பாணம் வந்தனர்.

இதனையொட்டி யாழ்.நகரில் இராணுவத்தினா ஆயுதங்களுடன் வீதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். பொலிஸாரும் உச்சப் பாதுகாப்பை வழங்கினா.

ஜனாதிபதி, பிரதமருக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவது போல் வீதிகள் மூடப்பட்டு உச்சக்கட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. (ஐ – 07)





# இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது மயிலங்காடு ஞானமுருகன் அணி

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையோடு பிரான்ஸ் தமிழ் உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தி வரும் உதை பந்தாட்டச்சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிகுமரன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 05:00 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக வாகின்சன் 03, பவித்திரன், தீபன் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்று கொடுத்தனர்.



## பாகிஸ்தானுக்கு பச்சைக் கொடி காட்டிய இலங்கை

பாகிஸ்தானில் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாட இலங்கை பச்சைக் கொடி காட்டியுள்ளது.

சமீபத்தில் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி, ஒரு நாள் மற்றும் டிரி – 20 தொடர்களில் விளையாடியது.

இதனையடுத்து, ஐ.சி.சி. உலக டெஸ்ட சம்பியன்ஷிப்பின் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாட மீண்டும் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளுமாறு இலங்கையிடம் கோரப்பட்டது.

பாகிஸ்தான் – இலங்கை மோதும் முதல் டெஸ்ட் போட்டி டிசம்பர் 11ம் திகதி ராவல்பிண்டியிலும், 2ஆவது டெஸ்ட் டிசம்பர் 19ஆம் திகதி கராச்சியிலும் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா, மீண்டும் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை வீரர்களின் பாதுகாப்பு இலங்கை கிரிக்கெட் சபையின் பொறுப்பாகும், இது மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இதில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்திருந்தால், சமீபத்தில் நடந்து முடிந்த ஒரு நாள் மற்றும் ரி – 20 தொடருக்கான பாகிஸ்தான் சுற்றுப்பயண ஏற்பாட்டை இலங்கை முன்னெடுத்திருக்காது.

இதன் மூலம் எதிர்காலத்தில், வீரர்களின் நம்பிக்கை அளவை மேம்படுத்த நாங்கள் எதிர்பார்க்கிறோம். டெஸ்ட் போட்டிகளின் அட்டவணை குறித்து நாங்கள் விவாதங்களைத் தொடங்கும் போது இது முக்கியமானதாக இருக்கும் என கூறியுள்ளார். (ஐ)

## சுர்ஜித்தைப் பத்திரமாக மீட்க பிரார்த்திக்கிறேன்




ஆழ்துளை கிணற்றில் சிக்கியுள்ள சுர்ஜித்தை பத்திரமாக மீட்க பிரார்த்திப்பதாக தமிழகத்தைச் சேர்ந்த இந்திய கிரிக்கெட் அணி வீரர் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தை சோகத்தில் ஆழ்த்தியுள்ள குழந்தை சுர்ஜித்தை மீட்பதற்காக நடைபெற்று வரும் மீட்புப் பணி குறித்து பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். சுர்ஜித் நலமுடன் மீட்கப்பட வேண்டும் என்று பிரபலங்கள் உட்பட பலரும் பிரார்த்தனை செய்வதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரும், தமிழகத்தைச் சேர்ந்தவருமான ரவிச்சந்திரன் அஸ்வினும் சுர்ஜித்துக்காக பிரார்த்திப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், 'ஆழ்துளை கிணற்றில் சிக்கியுள்ள குழந்தை சுஜித்தை பத்திரமாக மீட்க பிரார்த்திக்கிறேன்' என தெரிவித்துள்ளார். மேலும் தனது ட்விட்டர் பக்கத்தில் prayforsurjeeth என பதிவிட்டுள்ளார்.

## சுவிஸ் உள்ளரங்க ரென்னிஸில் பெடரர் 10ஆவது முறை சம்பியன்



ஜாம்பவான் ரோஜர் பெடரரின் கைகளைச் சம்பியன் கிண்ணம் அலங்கரித்தவாறு சுவிஸ் உள்ளரங்க ரென்னிஸ் தொடர் நிறைவுக்கு வந்துள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் பாஸல்லில் நடை பெற்ற 'ஏ.டி.பி உலக தொடர் 500' என்ற வகைக்குள் அடங்கும் இத்தொடர், ஆண்களுக்கே உரித்தான ஒரு தொட ராகும்.

உள்ளரங்க கடினத்தரையில் நடைபெறும் இத்தொடரின், 50ஆவது அத்தியாயம் கடந்த 21ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் முறை நடைபெற்றது.

இதில் சுவிற்ஸர்லாந்தின் முன்னணி வீரரான ரோஜர் பெடரர், சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், சுவிற்சர்லாந்தின் முன்னணி வீரரான ரோஜர் பெடரர், அலெக்ஸ் டி மினியூர்ரை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டில் எவ்வித சவாலையும் எதிர்கொள்ளாத ரோஜர் பெடரர், செட்டை 6 - 2 என எளிதாக கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், அலெக்ஸ் டி மினியூர், ரோஜர் பெடரருக்கு நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், அந்த எதிர்பார்ப்புக்களை தவிடுபொடியாக்கிய ரோஜர் பெடரர், இரண்டாவது செட்டையும் 6 - 2 என இலகுவாக கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.

சுவிஸ் உள்ளரங்க ரென்னிஸ் தொடரில், ரோஜர் பெடரர் பெற்றுக் கொண்ட பத்தாவது சம்பியன் பட்டமாகும். இதற்கு முன்னதாக ரோஜர் பெடரர், 2006, 2007, 2008, 2010, 2011, 2014, 2015, 2017, 2018ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நடப்பு ஆண்டில் பெரிதளவில் சாதிக்காத ரோஜர் பெடரருக்கு, இந்த சம்பியன் கிண்ண ஆண்டு இறுதியில் மிகப்பெரிய உற்சாகத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்துள்ளது.

## பிறந்த நாளில் சதம் விளாசிய வோர்னர்



டேவிட் வோர்னர் நேற்று முன்தினம் சதம் விளாசியதுடன், போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டு, தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

அவுஸ்திரேலிய அணியின் அதிரடி ஆட்டக்காரரான டேவிட் வோர்னர் நேற்று முன்தினம் தனது 33 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

அதேவேளை அடிலெய்டில் நேற்று முன்தினம் ஆரம்பான இலங்கைக்கு எதிரான முதலாவது இருபதுக்கு – 20 போட்டியில் மொத்தமாக 56 பந்துகளில் 10 நான்கு ஓட்டம், 4 ஆறு ஓட்டம் அடங்கலாக சதம் விளாசி ஆட்டமிழக்காதிருந்தார். சர்வதேச இருபதுக்கு – 20 கிரிக்கெட் அரங்கில் டேவிட் வோர்னர் பெற்றுக் கொண்ட முதல் சதம் இதுவாகும்.

அத்துடன் இப் போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டும் உள்ளார். (ஐ)

## நயினாதீவில் மினி சூறாவளி!






யாழ்ப்பாணம், ஒக். 29

நயினாதீவில் நேற்று அதிகாலை மினி சூறாவளி தாக்கியதால் அங்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

நயினாதீவு இறங்குதுறையிலிருந்து ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் போடப்பட்டிருந்த கூடாரங்கள் காற்றினால் பிய்த்து வீசப்பட்டன.

ஆலயத்தின் முன்னால் உள்ள மண்டபங்களின் ஓடுகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டிருப்பதுடன் ஆலய வாசலில் அமைக்கப்பட்டிருந்த சிறு கடைகளும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன. எனினும் பொதுமக்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (ஐ - 07)

# இனவாதம், மதவாதம் கக்கும் வேட்பாளர்கள்

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவிக்கும் சில கருத்துக்களால் குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். (ஐ)

கொழும்பு, ஒக். 29

ஜனாதிபதி வேட்பாளர்கள் இனவாதம் மற்றும் மதவாதம் சார்ந்த கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

வேட்பாளர்களின் குரோதத்தை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை பிரசாரம் செய்யாதிருக்க அனைத்து ஊடகங்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

## வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதன் 29 ஆவது வருட நினைவு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஒக். 29

வடக்கு முஸ்லிம் பலவந்த வெளியேற்றத்தின் 29ஆவது வருட நினைவு நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் யாழ். கிளிநொச்சி முஸ்லிம் பேரவையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

“வடக்கின் எமது பூர்விக உரித்தை உறுதி செய்வோம்” என்ற தொனிப்பொருளில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்வியாளர்கள் விசேட உரையாற்றவுள்ளார்கள்.

1990 ஆண்டு வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு, யுத்தம் முடிவுற்ற பின்னர் மீண்டும் மீள் குடியேறியோர் சொந்த பூமியில் வாழும் உரிமையற்றவர்களான நிலையினால் மீண்டும் அகதி வாழ்க்கைக்கு திரும்பியுள்ளார்கள். தற்போது யாழில் 850 குடும்பங்கள் மட்டும் வாழ்ந்து வருகின்றன.

மீள்குடியேறி வாழும் மக்களுக்கான வீட்டுத்திட்டம், வாழ்வாதாரம் மற்றும் நஷ்டஈடு போன்றவை முழுமையாக வழங்கப்படாமை குறித்து நாளைய 29 வருட நினைவு தினத்தில் உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (இ - 19)

### யாழ்ப்பாணத்தில் மீள் குடியேறியுள்ள

## முஸ்லிம் இரும்பு வியாபாரிகள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக். 29

இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ் முஸ்லிம் மீள்குடியேறிய இரும்பு வியாபாரிகள் சங்கம், சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக முடிவு செய்துள்ளது. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து பூரணமான ஒத்துழைப்பை வழங்கினோம். அது போன்று இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்து அவரை வெற்றி பெற வைப்போம். வெற்றி பெறுவோம் என்று இரும்பு வியாபாரிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாண முஸ்லிம்கள் 1990 ஆம் ஆண்டு பலவந்தமாக உடைமைகள் பறிக்கப்பட்ட நிலையில் வெளியேற்றப்பட்டு நாளையுடன் 29 வருடங்களாகின்றன. மீண்டும் 2002 இல் ஒரு சிலர் மீள்குடியேறியுள்ளோம். எங்களுக்கு இன்றுவரை அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரணங்களோ, வீடமைப்புத் திட்டங்களோ முழுமையாக நடைபெறவில்லை. நாங்கள் முன்பு குடியிருந்த காணிகளில் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை. எங்களுக்கு அனைத்துமே தடையாகவுள்ளன. சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வந்ததும் எங்களுக்கு ஒரு நல்ல தீர்வைப் பெற்றுத் தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம் என்று மேற்படி சங்கத் தலைவர் எஸ். எம்.சாலி கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்று வவுனியாவில் கோட்டாவின் பிரசாரம்!







வவுனியா, ஒக். 29

வவுனியாவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை கொட்டும் மழைக்கு மத்தியில் இடம்பெற்றது.

வவுனியா வைரவப் புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் மழைக்கு மத்தியில் இடம்பெற்ற இந்தக் கூட்டம் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமானது.

சுமார் 11 மணியளவில் மேடைக்கு வருகை தந்த ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாளர்கள் கோசமெழுப்பி வரவேற்றனர்.

இதனையடுத்து வடக்கு மக்களின் நிலைமைகள் தொடர்பாக கோட்டாபய உரையாற்றியிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜி.எல். பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, கே. கே. மஸ்தான் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir



# நல்லை ஆதீன முதல்வரை நேற்றுச் சந்தித்த கோட்டா



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 29

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தால் சிறையில் உள்ள அனைத்துக் கைதிகளையும் புனர் வாழ்வு அளித்து விடுதலை செய்வேன் எனத் தம்மிடம் உறுதியளித்தார் என நல்லை ஆதீன குரு முதல்வர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுத் தேர்தல் பிரசாரத்துக்காக வருகை தந்திருந்த பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ முதலில் நல்லை ஆதீன குரு முதல்வரை சந்தித்து ஆசி பெற்றதுடன் அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்தக் கலந்துரையாடலின் பின்னர் குரு முதல்வர் ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் சார்பாகக் களமிறங்கியுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய வெற்றியடைந்தால் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதாக என்னிடம் உறுதியளித்துள்ளார். குறிப்பாக அரசியல் கைதிகளைச் சட்ட ரீதியாக விடுவிக்க முடியும். அதன் ஊடாக அவர்களை விடுவிப்போம் என்று கூறியுள்ளார்.

வடக்கில் அபிவிருத்திகள் ஊடாக வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும்.குறிப்பாக புதிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு அதிகளவான வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும். வேலைவாய்ப்புக்கள் இல்லாமையால் தான் வடக்கில் உள்ள இளைஞர்கள் குழம்புகின்றனர். வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதைச் சுட்டிக் காட்டினார். அத்துடன் 5 தமிழ்த் தேசியக் கடசிகளின் 13 அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் என்னிடம் கூறினார்.அப்போது நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேசவேண்டும் எனக் கோரினேன். அத்துடன் இது தமிழ் மக்களின் விருப்பமும் அதுவாகவே இருக்கின்றது.மக்கள் குழப்பம் அடைந்துள்ளனர் என்று நான் கூறியிருந்தேன் – என்றார். (ஐ – 07)

# ஈஸ்டர் தாக்குதலின் பின்னால் இருப்போர் தண்டிக்கப்படுவர்

## மஹிந்த சமரசிங்க எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 29

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பின் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்த கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

குண்டுத்தாக்குதல் தேசிய பாதுகாப்பின் பலவீனத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்களை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை எவ்வித மான புதிய உண்மைகளையும் பகிரங்கப்படுத்தவில்லை. மாறாக் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் மிகச் சூட்சும மான முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள்.

தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு பலமான தலைமைத்துவத்தைத் தோற்றுவிக்கவேண்டும் என்பதற்காகவே பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம்.

இவரைத்தவிர்த்து பாதுகாப்புத் துறையில் தேர்ச்சி பெற்றவர் எவரும் கிடையாது. எமது ஆட்சியில் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பான மர்மங்கள் பகிரங்கப்படுத்தப்படும்.

அத்தோடு பொதுஜன பெரமுனவின் தேர்தல் கொள்கைப் பிரகடனம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்யும் தினத்தில் இருந்து செயற்படுத்தப்படும் – என்றார்.

# நாடு முழுவதும் உச்ச பாதுகாப்பு

## முப்படைகள் உஷார் நிலையில்

கொழும்பு, ஒக். 29

ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டமையையடுத்து அந்த இயக்கம் அதற்கு பழிவாங்கலாக உலகின் எந்த இடத்திலும் தாக்குதல் நடவடிக்கை எதனையும் நடத்தலாமென அஞ்சப்படுகிறது.

இலங்கையிலும் அப்படியான எதுவும் நடக்கலாமென அச்சமெழுந்துள்ளதால் அதன் காரணமாக நாடு முழுவதும் முப்படையினர் மற்றும் பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

திடீர் வாகனச் சோதனைகள் , பாதுகாப்பு ஏற்பாடுகள் ,கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்தல் உட்பட பல நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதுகாப்புத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே ஏப்ரலில் இலங்கையில் நடந்த தாக்குதல் சம்பவத்தை வரவேற்று ஐ.எஸ். தலைவர் பக்தாதி விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோட்டா நேற்று யாழ்ப்பாணத்தில் பிரசாரம்





ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்ஜனாதிபதிவேட்பாளர்கோட்டாபய ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். யாழ்ப்பாணம் றக்கா வீதியில் உள்ள மைதானத்தில் அவரது தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்தது. (ஐ)









# சமையல் எரிவாயு பெரும் தட்டுப்பாடு

## சிரமத்தை எதிர்கொள்ளும் மக்கள்

கொழும்பு, ஒக். 29

நாடளாவிய ரீதியில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்தியாவசிய தேவைகளுக்கு அப்பால் ஹோட்டல்களுக்குத் தேவையான எரிவாயு பற்றாக்குறையாக இருப்பதால் உணவுப் பொருள்களைத் தயாரிப்பதிலும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் முதல் இந்த தட்டுப்பாடு நிலவினாலும் கூட நேற்று முதல் கைவசம் இருந்த எரிவாயுவும் நிறைவடைந்துவிட்டதாக எரிவாயு விற்பனை முகவர்கள் தெரிவித்தனர்.

இந்த வார இறுதிக்குள் இந்தத் தட்டுப் பாடு நிலைமை சீர்செய்யப்படுமெனக் கூறப்படுகின்றது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.10.2019 இல் வெளியிடப்பெற்றது.